சத்திய வேத

# பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone : No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

83-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1958-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 20-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 45-ம் இலக்கம்

## நீர் பாப்பரசராவது எப்போது?

(தமிழாக்கம்: சாமுவேல் பெனடிக்ற்)

கருதினால் றொங்கல்லி ஆண்டவர் தமது சககருதினால்மாரால் பாப்பரசராகத் தெரியப்பட்ட அன்றுதினம் இன்னுமே சிவந்தராயிருக்கும் அவரது இளையசகோதரர்களான சவீரியோ (வயது 75), அல்பிறேதோ (வயது 69), ஜியுசிப்பி (வயது 64) ஆகியோர் கல்லாலான தங்கள் சிறிய வீட்டில் இராப்போசனம் அருந்திக்கொண்டிருந்தனர். அவ்வமயம் வத்திக்கான் வானொலியானது அவர்களின் மூத்தசகோதரர் கருதினால் றொங்கல்லி பாப்புஸ்தானத்துக்குத் தெரியப்பட்டிருப்பதை அறிவித்தது. அப்போது அவர்கள் அடக்கமுடியாத மகிழ்ச்சியடைந்து ஆனந்தக்கண்ணீர் வடித்தனர். சொற்ப வேளையில் அக்கிராமம் முழுவதும் அக்களிப்பு அலைமோதியது. நூற்றுக்கணக்கான நண்பர்கள் மூன்று சகோதரர்களினதும் இல்லத்துக்குச் சென்று அவர்கட்குத் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்து நின்றார்கள்.

மிலான்நகரிலே பொதுவுடைமைக் கொள்கை அதிகரித்துள்ள ஓர்பகுதி இன்று ஓர்சிறிய ஸ்ராலின்கிராட்என அழைக்கப்படுகின்றது. இப்பகுதியிலேயே பாப்பரசரின் 72 வயதுள்ள விதவையான சகோதரி அசுந்தா தனது புதல்வியின் குடும்பத்தவருடன் வசித்து வருகின்றாள். இவள் அன்றுமாலை பால் வாங்குவதற்காக வெளிச்சென்று வீடு திரும்பும்போது வழியிலே ஒருகுருவானவரைக் கண்டாள். அவர் இவளை வழிமறித்து அவளின் சகோதரர் பாப்பரசராகத் தெரியப்பட்டிருக்கும் சேதியை அவளுக்குத் தெரிவித்தார். அதனால், மகிழ்ச்சி பொங்கத் தனது புதல்விக்கு இச்சந்தோஷ சமாச்சாரத்தைத் தெரிவிக்குமாறு விரைந்து சென்றாள் அந்தப் பாக்கியவதியான விதவை.

பத்திரிகை நிருபர்கள் சிலருக்குத் தனது சகோதரரைப்பற்றிக் கூறுகையில் அசுந்தா தெரிவித்ததாவது: "குருமடத்துக்கு எனது சகோதரர் முதன்முதலாகச் சென்றசம்பவம் இன்னுமே எனக்கு நினைவிலிருக்கின்றது; எங்கள் கட்டளைக்குரவர் எமது இல்லத்துக்கு வந்து எனதுஅன்னையை விழித்து, 'இந்தஇளைஞன் குருமடத்திலிருந்து வெளியேறும்போது மகிமைப்பிரதாபத்துடன் வெளியேறுவான்'எனக் கூறினார். எனதுஅன்னை சொற்பநேரத்தில் தன் நண்பர்களைச் சந்திக்குமாறு சென்றாள். மாலையில் அவள் வீடு திரும்பியபோது இரண்டு லயர் நாணயங்களை மேசையில் வைத்தாள். அவளது கண்கள் கண்ணீரால் நிறைந்திருந்தன. குருமடத்திற்குச் செல்லும் தனது புதல்வனுக்குக் கொடுத்தனுப்புவதற்காக இச்சிறிய தொகையையே அவளாற் சேகரிக்க முடிந்தது.

"நாங்கள் பிறந்துவளர்ந்த சோத்தோ இல் மொன்தே கிராமத்தை அவர் அதிகமாக நேசித்தார். எங்கள்பழைய இல்லத்தின் ஓர்அறையில் திவ்வியபூசை நிறைவேற்றுவதைத் தமக்கு மிகவும் உவப்பானகாரியமாகக்கருதினார். எங்கள் கிராமத்தின் பழையகோவிலையும் அவர் அதிகமாக நேசித்தார். சமீபத்தில் அவர் இக்கிராமத்துக்கு விஜயஞ் செய்தபோது பழைய கோவிற் கட்டடத்தைக் காணவில்லை. அதை இடித்துத் தள்ளிவிட்டு அதனிடமாக ஓர் புதியகட்டடம்எழும்பிக்கொண்டிருந்தது. தனதுபிரியநண்பனாகக் கருதிவந்த பழைய கோவிற்கட்டடத்தைத் தாம் இனிமேல் காணமுடியாதென்பதை எண்ணியபோது எனது சகோதரர் கண்ணீர்சிந்தி அழுதார். அவர் கண்ணீர்விட்டழுவதை நான் கண்ணாரக்கண்டது அதுவே முதற்தடவையாகும்."

பாப்பரசரின் சக மாணவனும் அவர்பிறந்த கிராமத்தில் இன்னுமே வசித்து வருபவருமான 80 வயதுடைய பற்றிஸ்தா அகாசி என்ற வயோதிகர் பாப்பரசரைப் பற்றிக் கூறியதாவது:- "றொங்கல்லி வகுப்பில் மிகத்திறமையாளனாக விளங்கியது எனக்கு இன்னுமே ஞாபகத்திலிருக்கின்றது. இதையிட்டு நானும், மற்றப்பையன்களும் மிகவும் பொறாமையுள்ளவர்களாயிருந்தோம். அவர்மீது கொண்ட பொறாமைகாரணமாக பாடசாலை முடிந்தபின் றொங்கல்லியின் வருகைக்காகக் காத்துநின்று அவர்மீது கற்களைஎறிந்துவிட்டு ஓடுவது எங்கள் வழக்க

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## 12-20 — 5-20

"அவளுடைய கையெழுத்து அல்லவா இது? மரணத்தை நெருங்கிக்கொண்டிருக்கும் அவளா கடிதமெழுதியிருப்பாள்? இருக்காது... ஆனால், நிச்சயம். இது அவளுடையகையெழுத்துத்தான். ஆச்சரியமாக அல்லவா இருக்கிறது!"

மேஜர் ஜி. பி. இராயனின்கையில் இருந்ததுகடிதம். 2-வது உலகயுத்தகாலம். தூத்துக்குடிக்கும், றோமைக்குமுள்ள தூரம் 3,000மைல். அவர்மனம் சுழன்றது. விரல்கள்கூடச் சற்றுநடுங்கிவிட்டன. ஆறுமாதமாக அவருடையமனைவி யோசேப்பினிடமிருந்து கடிதமே கிடையாது. கடைசியாக அவளைப்பற்றிவந்த செய்தியானது, அவள் நரம்புவியாதியால் கடுமையாகத் தாக்கப்பட்டுச் சாவைநோக்கி விரைந்துகொண்டிருக்கிறாள் என்பதுதான். அவளைக் கடைசிமுறையாகச்சென்று காணத்துடித்தார். இராணுவலீவு எழுதிக்கேட்டிருந்தார். அந்தநேரத்தில்தமதுமனைவியின் தெளிவான கையெழுத்தைக் கடிதத்தின்உறையில்கண்ட டக்றர்இராயன் மனக்கிளர்ச்சி அடைந்ததில் ஆச்சரியமில்லை. திரும்பவும் றோமையிலிருந்து இராணுவலீவுபெற்று நான் தூத்துக்குடிபோய்ச் சேருமுன் அவள் இறந்துவிட்டால்! ......என எண்ணியதும் அவர்மனம் பதறியது. கடிதத்தைத் திறந்தார்.

தூத்துக்குடி, பெயர் லைற்
17 கார்த்திகை 1944.

ஆம்! அது யோசேப்பினுடைய முத்துப்போன்ற எழுத்துத்தான். சந்தேகமேஇல்லை ... கடிதத்தைப் படித்தார் மேஜர். அவரை அறியாமலே அக்களிப்போடு குதித்து எழுந்தார். நேரேஓடினார் பாப்பரசரின் குருமடத்தைநோக்கி. மேஜர்இராயன் அலுவல்பார்த்த இராணுவமுகாமிற்கும், குருமடத்திற்கும் சிலமைல் தூரந்தான். நேரேசென்று வண. தோமஸ்சுவாமியாரைப் பார்க்கவேண்டுமென்று கேட்டார். அங்குபயின்ற குருமாணவர்களுக்கு முதல்அதிகாரியாக இருந்த வண. தோமஸ் சுவாமியார் (தற்போது தூத்துக்குடி மேற்றிராணியாராக இருக்கும் மகாவந். தோமஸ்ஆண்டவரவர்கள்) தாமதமின்றிவந்து விசாரித்தார். சுவாமியாரைக்கண்டதும் "சுவாமிபுதுமை! இதுபுதுமை! பாருங்கள். யோசேப்பின் சுகமடைந்துவிட்டாள். அவளே எனக்குக் கடிதம்எழுதியிருக்கிறாள்" என்றுகூறி ஆனந்தங்கொண்டாடினார் மேஜர்இராயன்.

* * *

தூத்துக்குடியிலே மரணத்தை நெருங்கிக்கொண்டிருந்த மேஜர் ஜி.பி.இராயனின்மனைவியார்யோசேப்பின்வேறுயாருமல்ல. காலஞ்சென்ற மகாவந். றோச்ஆண்டவரவர்களின் தங்கைமகள்தான். 1944-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 16-ம்தேதிகாலை மகாவந். றோச்ஆண்டகையின் குடும்பத்தினர் ஒருவருக்காவது மனநிம்மதி இல்லை. எப்போது யோசேப்பின் இறப்பாளோ என்ற கவலை எல்லோரையும்பிடித்து வாட்டியது. அன்று மத்தியானம் ஆயிற்று. நிலைமையில் ஒருமுன்னேற்றமும் இல்லை. சொந்த மாமாவாகையால் மகாவந். றோச் ஆண்டவரவர்களும் கவலையுற்றிருந்தார். ஆனால், அன்றுமாலை 5 மணி20நிமிஷமளவிற்கு யோசேப்பின் திடீரெனஎழுந்து உட்கார்ந்தாள். "அம்மா! அம்மா!!" என்று கூப்பிட்டாள். எல்லோரும் ஓடிப்போனார்கள். "என்னம்மா உடம்பிற்கு?"என்று பரிவோடும், கவலையோடும் விசாரித்தார்கள். "இங்கே பாருங்கள்அம்மா எனக்குச் சுகமாகிவிட்டது. நான் நன்றாகஇருக்கிறேன். என்ன தென்பாக இருக்கிறது!" என்று கூறிக்கொண்டே எழுந்துநிற்க முயன்றாள்யோசேப்பின்.

இதுவும் வியாதியின்கோளாறுதானோஎன்று ஐயமுற்று அவளை எழும்பவிடாமல் அமுக்கிப்பிடித்தார்கள் சூழநின்றவர்கள். "விடுங்கள் எனக்குச் சௌக்கியம் கிடைத்துவிட்டது" என்று சொல்லிக்கொண்டே யோசேப்பின்எழுந்தாள். சாதாரணமாகப் பேசினாள். சிரித்தாள். உணவு கேட்டு வாங்கிஅருந்தினாள். எல்லோர்நெஞ்சிலுமிருந்த கவலையைப்போக்கி அவர்களைச் சந்தோஷக்கடலில் மூழ்கடித்தாள். மறுநாளே உட்கார்ந்து தன்கைப்பட றோமாபுரி இராணுவமுகாமில் நோயாளிகளுக்கு வைத்தியசிகிச்சை அளித்துவந்த தனதுகணவர் ஜி. பி. இராயனுக்கு நீண்டஓர் கடிதம் எழுதினாள். அதிலே

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லே அன் பிறே

# LEY & FREY


## முதன்மைபெற்ற வீட்டுப்பறவைகள், மிருகங்களின் உணவு வியாபாரிகள்


கொழும்புமாநகரிலே அரைநூற்றூண்டுகளுக்குமேல் நாம் பெற்றுள்ள அனுபவத்தைக்கொண்டு ஆடுகள், மாடுகள், கோழிகள் முதலாம் நீங்கள் வளர்க்கும் சீவபிராணிகளுக்கு உணவூட்டுவதற்கும், பேணிப் பராமரிப்பதற்குமாக உங்களுக்குத் தேவைப்படுகிறவைகளையெல்லாம் உதவும் சேவையில் தற்போது நாம் ஈடுபட்டிருக்கிறோம்.

(வீட்டுப்பறவைகள், மிருகங்கள் ஆதியவற்றின் உணவு நிபுணர்கள்)

உலகப்பிரசித்திபெற்ற (ஐரோப்பிய - அமெரிக்க) மருந்துகளை இருப்பில் வைத்திருக்கிறோம். பெரும்பாலான பாடசாலைகளும், மற்றும் மதஸ்தாபனங்களும் நம்மை ஆதரிக்கின்றன.

யாழ்ப்பாணம், ஸ்ரான்லிவீதி, 21/2 எனும் இலக்கத்தில் தகுந்த ஆயத்தங்களுடன் தற்போது ஒரு கிளை ஸ்தாபனத்தைத் திறந்திருக்கிறோம்.





### பறவைகளுக்கு

| | | ரூத். | ரூ. ச. |
|---|---|---|---|
| **முட்டைவர்த்தினி: 1-ம் நம்பர்.** | | | |
| முட்டைஇடும் கோழிகளுக்கான தானியக்கலவை | — | 100 | 26–00 |
| **முட்டைவர்த்தினி: 2-ம் நம்பர்.** | | | |
| முட்டைஇடும் கோழிகளுக்கான தானியக்கலவை | — | 100 | 24–00 |
| **முட்டைசுரபி:** | | | |
| முட்டைஇடும் கோழிகளுக்கான தாதுப்பொருட்கலவை | | 100 | 21–00 |
| ஷி சீவசத்து A + $B_2$ + $D_3$ சேர்ந்தது | — | 100 | 22–00 |
| **சீவசுரபி:** | | | |
| வளரும்பறவைகளுக்கான தாதுப்பொருட்கலவை | — | 100 | 19–00 |
| ஷி சீவசத்து A + $B_2$ + $D_3$ சேர்ந்தது | — | 100 | 20–00 |
| **கொழுக்கும் தீனி:** சாப்பாட்டுக்கு வளர்க்கப்படும் பறவைகளுக்கான விசேடகலவை உணவு | — | 100 | 19–00 |
| **குஞ்சுவர்த்தினி:** குஞ்சுக்கான தானியக்கலவை | — | 100 | 26–00 |
| **குஞ்சுச்சுரபி:** சிறுகுஞ்சுகளுக்கான தாதுப்பொருட்கலவை | | 100 | 23–00 |
| ஷி சீவசத்து A + $B_2$ + $D_3$ சேர்ந்தது | — | 100 | 24–00 |
| **வான்கோழி உணவு:** | | | |
| முட்டைஇடும் பறவைகளுக்கான கலவை | — | 100 | 19–00 |
| **தாரா, வாத்து உணவு:** | | | |
| முட்டைஇடும் பறவைகளுக்கான கலவை | — | 100 | 19–00 |

### மிருகங்களுக்கு

| | | ரூத். | ரூ. ச. |
|---|---|---|---|
| **அமுதசுரபி:** 1-ம் நம்பர். பாற்பசுக்களின் கலவைஉணவு. பிண்ணக்கு, துவரஉமி, உழுந்துமூக்கு, மைசூர்உமி, கடலைமா, கடலைக்கோது, கோதுமைத்தவிடு, உலோகச்சத்துக்கள், சோழம் என்பன விகிதசாரமாகக் கலக்கப்பட்ட உணவு | — | 100 | 18–00 |
| ஷி சீவசத்து A + $B_2$ + $D_3$ சேர்ந்தது | — | 100 | 19–00 |
| **அமுதசுரபி:** 2-ம் நம்பர். | — | 100 | 17–00 |
| **எருத்துமாட்டுத்தீனி:** வண்டிஇழுக்கும் மாடுகளுக்கும், வசப்பிழையான எருதுகளுக்குமான கலவைஉணவு | — | 100 | 17–00 |
| **சாதாரண கலவை:** 1-ம் நம்பர் | — | 100 | 15–00 |
| **சாதாரண கலவை:** 2-ம் நம்பர் | — | 100 | 14–00 |
| **மீன் தீனி:** வீட்டில் வளர்க்கப்படும் மீன்களுக்கான உணவு சிக்கனமான அளவில் சிறிய டப்பாக்களில் அடைக்கப்பட்டது. | | ¼ ரூத்தல் | –50 |

—※—

| | | | |
|---|---|---|---|
| **மீன்சத்து:** கலவைகளுக்கு | — | 1 | –30 |
| **சுண்ணக்கலவை:** | — | 1 | –30 |
| **எலும்புச்சத்து:** சுத்திசெய்யப்பட்டது | — | 1 | –50 |
| **மீன் ஈரல் நெய்:** | | ஒரு கலன் | 18–50 |
| **மீன் ஈரல் நெய்:** | | ஒரு போத்தல் | 3–25 |

மேலும் தேவையான விவரங்களுக்கு:

## லே அன் பிறே

**தலைமை ஸ்தாபனம்:**
**65, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு.**
T. Phone: 2751. — T. Gram: "EDRAJ"

**கிளை ஸ்தாபனம்:**
**21/2, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.**


### குருநாகலும் கன்னியாஸ்திரிமாரும்

குருநாகல் முனிசிப்பல்சபையின் மாதாந்தபொதுக்கூட்டம் சென்ற8-ந்திகதிசனிவாரம் நடைபெற்றபோது, அதிலே குருநாகல்ஆஸ்பத்திரியில் நோயாளரைப் பராமரித்துவருகின்ற கன்னியாஸ்திரிமாரின் சேவைகள் முன்போல நிலைத்திருக்க செய்யவேண்டுமென்று சுகாதாரமந்திரியைக் கேட்கும்பிரேரணை ஒன்று ஏகமனதாக நிறைவேறியுள்ளது. இந்தப்பிரேரணையை எடுத்தாண்ட திரு. எஸ். பெர்ணண்டோஅவர்கள் பேசியபோது: தங்கள் கடமைகளைச் சமயப்பக்தியுடனும், கடமைப்பற்றுடனும் செய்துவந்திருக்கின்ற கன்னியாஸ்திரிகள் நீக்கப்படுமிடத்து, குருநாகல்ஆஸ்பத்திரியில் மாத்திரமல்ல, ஆனால், இலங்கையிலுள்ள தொழுநோயாளர்சாலைகளிலும், சயரோகஸ்தாபனங்களிலும் ஒழுங்கீனமும், தாறுமாறுமே உண்டாகும்; இலங்கையானநேர்ஸ் மாரும், அற்றெண்டன்ற்மாரும் தங்கள்கடமைகளைச் செய்வதில் பராகண்டிதமாய் இருந்துவரும்போது, கன்னியாஸ்திரிகள் பிரசன்னமாயிருப்பதும், இடைநிற்பதுமெல்லாம் நோயாளர்மட்டிலே அலட்சியமாய் இருந்துவருகிறவர்கள் மட்டில் சிறந்த ஓர்அதிகாரசெல்வாக்காய் என்றைக்கும்இருந்துவந்திருக்கின்றனஎனக் கூறலாயினர். இதற்கிடையில் குருநாகல்பட்டணவாசிகள் சிலர் ஆஸ்பத்திரியிலிருந்து நிறுத்தப்படவிருக்கின்ற இருபதுகன்னியாஸ்திரிமாரையும் முன்போலஇருந்துவரச் செய்யவேண்டுமெனத்தூண்டிப் பிரதமருக்கு ஓர்விண்ணப்பம் அனுப்பிவைத்திருக்கின்றனர். இந்தவிண்ணப்பத்திலே, கன்னியாஸ்திரிகளின் இடமாக இளவயதுடையவர்களும், அனுபவமில்லாதவர்களுமான நேர்ஸ்மாரைத் தகுந்தவாறோ அன்றேல் போதியஅளவாகவோ அமர்த்தமுடியாதென்றும் சுட்டிக்காட்டியிருக்கின்றனர். இன்னும் குருநாகல்ஆஸ்பத்திரியிலே கன்னியாஸ்திரிமாரை திரும்பவும்நிலைநிறுத்திவைக்கும்படியாகக்கேட்டுக் குருநாகல் பிரிவிலுள்ள கிராமாபிவிர்த்திச் சங்கங்களின்மூலம் சுகாதாரமந்திரி காரியாலயத்துக்கு மனுப்பண்ணிக்கொள்ளுதற்கான ஏற்பாடுகளும் அப்பிரிவிலே செய்யப்பட்டுவருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுப் பாதையில் ரோமைமா நகரம்

—: நீ. மரிய சேவியர் :—

கடந்தசிலவாரங்களாக வத்திக்கான் இராச்சியத்தைச் சுற்றியே உலகின் கண்கள் வட்டமிடலாயின. திறந்த கண்களுடன் மாத்திரம் உலகம் பார்க்கவில்லை. திறந்தசிந்தையுடனும் உற்று நோக்கியது. திறந்த இதயத்துடன் உணர்ச்சிபெற்று நின்றது. ஒருசில நாள் உடைந்த உள்ளத்துடன். இன்னும்சிலநாள் அங்கலாய்ப்புடன். கடைசியாக மகிழ்ச்சியுடன். அப்படியாக என்ன பிரமாதமான காரியம் நிகழ்ந்துவிட்டது என்று கேட்கலாம். ஒரு காரியம் அல்ல. பல காரியங்கள் நடந்தேறிவிட்டன.

### அணைந்த ஒளி

பரிசுத்ததந்தை 12-ம் பத்திநாதர் பரமபதம் அடைந்துவிட்டார், அன்பின் அரசாட்சி புரிந்தமன்னர் மறைந்துவிட்டார் என்றசெய்தி உலகமுழுவதும்பரவ அதிகநேரம் செல்லவில்லை. அவர் விரைவிலே சுகம் பெறுவாரென்று ஆவலோடும், வேண்டுதலோடும் எதிர்பார்த்த உலகத்திற்கு ஆழ்ந்த கவலையைக் கொடுத்தது அந்தச் சோகச்செய்தி...... அவர் ஓர் தந்தையாய் இருந்தார். ஓர்அன்பான தந்தையாய் இருந்தார். நீதியையும், சமாதானத்தையும் நிலைநாட்டப் பெரும் பாடுபட்டார். உண்மைக்காகப் போர்தொடுத்தார். உயிர்போகுமட்டும் போராடினார். இதனை உலகம்அறியும். இருள் படிந்த உலகத்திற்கு அவர் ஒளியாய் இருந்தார். ஆமாம், குன்றின்மேல் ஏற்றிவைத்த அந்தஒளி இவ்வுலகில் அணைந்துவிட்டது. மறுஉலகில் ஒரு தாரகைஉதித்து மிளிர்கின்றது.

### பகையும் பாராட்டும்

அவரின்மறைவைஒட்டி உலகப்பெரியார்கள் தங்கள் மனவருத்தத்தைத் தெரிவித்தார்கள். சாதி, நிறம், மதம் பாராது அவருக்கு மரியாதைசெய்தார்கள். அநேகதேசங்கள் துக்கம்கொண்டாடின. பத்திரிகைகள் பத்தி பத்தியாக அவரைப் புகழ்ந்து எழுதின. இருந்தும் எல்லாநாட்டுமக்களும் அவரைக் கனம்பண்ணவில்லை. மரியாதை செய்யாதுவிட்டால் பரவாயில்லை. ஆனால், அவரைப்பற்றி உண்மையில்லா தவைகளைப் புனைந்து கூறின. ஆம், ருஷியாவும், அதன்செவிப்பிடியிலுள்ள சிலகம்யூனிஸ்த நாடுகளுமே அப்படிச் செய்தது ஆச்சரியமல்ல. "உலகசமாதானத்திற்காக அயராதுழைத்த தந்தை" என்று சுதந்திரஉலகம போற்றியது. "யுத்தப்பிரியர்" என்று மஸ்கோ அவர்மீது குற்றஞ் சுமத்தியது. ஆனால், உண்மை நெஞ்சம் படைத்த மக்களுக்கு உண்மை விளங்கும்.

### கடைசிக் கடன்

தந்தைக்குச் செய்யவேண்டிய அத்தனைஅன்புடன் அவரை அடக்கஞ்செய்தனர். அவர் விரும்பியதுபோல் அர்ச். பேதுருவானவரின் கல்லறைக்கு அருகிலேயே அவருடைய கல்லறையும் அமைக்கப்பட்டது. ஓர் மன்னருக்கு அளிக்கப்படும் கண்ணிய கௌரவத்துடன் கடைசித் திருச்சடங்குகள் நடைபெற்றன. அவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்திலே ஒன்பது தினங்களாகத் திவ்வியபூசைகளும், வேண்டுதல்களும் நடைபெற்றன. கடைசிநாட்பூசை கருதினால்திசுரான் ஆண்டகையால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. அதற்குப் பல்லாயிரக்கணக்கான மக்கள் சமுகமளித்தார்கள். ஐம்பத்துமூன்றுநாடுகள் தங்கள்பிரதிநிதிகளை அனுப்பியிருந்தன. தந்தையின்உடல் மறைந்துவிட்டது. ஆனால், மக்களின் உள்ளத்தில் அவரது அன்புஉருவம் மறைந்துவிடவில்லை. அவர் மனக்கோவிலில் வைத்து அன்பு செலுத்தப்பட்டேவருவார். கிறீஸ்துநாதருக்காக வாழ்ந்தார், வருந்தி உழைத்தார், இறந்தார் சம்பாவனை பெறப் பிரிந்து சென்றுவிட்டார். பிள்ளைகளுக்குரிய எமது அன்புக்கரங்களின் குவிப்பு அவருக்கு உரியதாகுக!

### அடுத்தவர் யார்?

உலகமுடிவுமட்டும் திருச்சபை அரசுபுரியும். ஆகவே, ஒரு அரசர் இறந்துவிட்டால், இன்னொருவரைத் தெரிந்தெடுக்கவேண்டும். அவர் ஓர் கருதினாலாக இருக்கலாம், மேற்றிராணியாராக இருக்கலாம், குருவானவராக இருக்கலாம், அல்லது ஓர்சாதாரண கத்தோலிக்கனாக இருக்கலாம். ஆனால், கருதினால்ஒருவரே பாப்பானவராகத் தெரிவுசெய்யப்படுவது வழக்கம். அங்ஙனமாக, எல்லோரும் பாப்பானவரைத் தெரிந்துகொள்ள முடியாது. கருதினால்மார்களால்தான் அதுமுடியும். அதனால் பாப்பரசர் இறந்ததும கருதினால்மாரெல்லாம் ரோமைக்குவருவார்கள். இம்முறை எல்லாக்கருதினால்மாரும் ரோமைக்கு வரவில்லை. ஹங்கேரியநாட்டுக்கருதினாலும், யூகோசிலேவியநாட்டுக் கருதினாலும் தங்கள் அரசாங்கங்களால் தடுத்துவிடப்பட்டனர். ரோமைக்கு வந்தவர்களிலும் இருவர் தேர்தலுக்குமுன் இறந்துபோனார்கள்.

25-ந்திகதி சனிக்கிழமைகாலை அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயம் மக்களால் தேங்கியிருந்தது. அன்றுதான் தேர்தல்தொடங்கும்நாள். காலை 9மணிக்குத் தூயஆவியானவரின் பூசை. புதியதலைவரைத்தெரியும் வரங்கேட்டுத் தூயஆவியானவருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டபூசை. பூசைதொடங்குவதற்குச் சற்றுமுன் 48 கருதினால்மார் வரிசையாக ஆலயத்தைநோக்கி வந்தார்கள். பெரியபலிபீடத்தின்முன்பாக முழந்தாளிட்டுச் செபித்தபின் தத்தமக்குக் குறிக்கப்பட்ட இடங்களில் அமர்ந்தார்கள். மக்கள்எல்லோர் மத்தியிலும் ஒரேபரபரப்பு. அவர்களில் ஒருவர்தானே புதியபாப்பரசராக வரப்போகிறார் என்றசிந்தனை. ஒவ்வொருவரையும் இயலுமானஅளவு பார்த்துவிட வேண்டுமென்றஅவா. இப்படியான அரியசந்தர்ப்பம் எல்லாச்சமயங்களிலும் கிடைக்குமா?

தூயஆவியானவரின் பூசை கருதினால்திசுரான்ஆண்டவரால் ஒப்புக்கொடுக்கப்பட்டு முடிந்ததும் கருதினால்மார் செய்யப்போகும் கடமையைப் பற்றி ஒருகுருவானவர் பிரசங்கம்நிகழ்த்தினார். அதன்மேல், கருதினால்மார்எல்லோரும் ஆலயத்தைவிட்டு வெளியே செல்ல, மக்கள்கூட்டமும் மெதுவாகக் கலைந்தது.

அன்றுசாயந்தரம் 4மணிக்கு 51கருதினால்மாரும் சிஸ்ரைன் சிற்றாலயத்தில் குழுமினார்கள். இந்தச்சிற்றாலயம் அர்ச். பேதுருவானவர் தேவாலயத்திற்குப் பக்கத்தில்உள்ளது. இது பாப்பரசரின்ஆலயம். வழக்கமாகத் தேர்தல் இங்கேயேநடைபெறும். அதனுள்ளேசென்றபின் அவர்களுக்கும் வெளிஉலகத்திற்கும் தொடர்புஇல்லை. தேர்தல்முடியுமட்டும் அவர்கள்வெளியேவரஇயலாது. ஒருவர்பாப்பரசராகத் தெரியப்படுவதற்கு மூன்றில் இரண்டுபங்கு வாக்குகளும், அவற்றுடன் இன்னும்ஒருகூடியவாக்கும் பெறவேண்டும். காலையில் இரண்டுமுறை, மாலையில் இரண்டுமுறையாக வாக்கெடுக்கப்பட்டது. இருதினங்களாய்க் காலையிலும் மாலையிலுமாக வாக்கெடுப்புகள் நடைபெற்றன. புகைப்போக்கியிலிருந்து கரும்புகையே வந்துகொண்டிருந்தது. ஆலய மைதானத்தில் குழுமியிருந்த மக்களுக்கெல்லாம் ஏமாற்றத்தின்மேல் ஏமாற்றம்.

### வெள்ளையா? கறுப்பா?

கடைசியாகச் செவ்வாய்க்கிழமை விடிந்தது. இன்றுமா ஏமாற்றம்? என்ற கேள்வியுடன் அன்றுபின்னேரமும் மக்கள்வந்தார்கள். 4மணிக்கே சுமாரானகூட்டம். பொழுதுபோக்காக யார் பாப்பரசராக வரக்கூடும்? என்பதைச் சிலர்ஆராய்ந்துகொண்டிருந்தனர். "இந்தப்பத்திரிகை இவ்விதம்கூறுகிறது; அவர் இவ்வாறுசொன்னார்; அமெரிக்ககருதினால் அல்லது ருஷியதொடர்புள்ள கருதினால்தான் வருவார்என்று ருஷியர்கள் திடமாகக் கூறுகிறார்கள்" என்றே எங்கும்பேச்சாயிருந்தது. மணிஐந்தாகியது. புகையைக்காணவில்லை. மெதுவாக இருட்டத்தொடங்கியது. அதற்கிடையிலே மக்கள்தொகையும் அதிகமாகிவிட்டது. முன்னேறிக்கொண்டு நின்றார்களே தவிரப் பின்வாங்குகிறவர்கள் இல்லை. ஆலயசதுக்கத்தில் நின்றவர்களே 50 ஆயிரவருக்குமேல். இன்னுமே வந்துகொண்டிருந்தார்கள். கிணற்றுநீர் மட்டத்துடன்நிற்கும். ஆனால், அன்று வந்தவர்களின் தொகை மட்டத்திற்கு மேலாகிவிட்டது.

மணி 5-10. மெல்லமெல்லச் சப்தம் ஒன்று பிறந்தது. முந்திய நாட்களைப் போல் "புகை, புகை" என்று செய்தி பரந்தது. ஆயினும், வந்தபுகை வெள்ளையா என்பது சந்தேகந்தான். பார்த்துநின்றவர்கள் இன்னும் கறுப்புத்தானே என்று சொல்லி அடுத்த புகையை எதிர்பார்த்திருந்தனர். ஒரு நிமிடம் கழிந்தது. புகை வரவில்லை. அதற்குள் வெளியேயிருந்த சக்திவாய்ந்த பெரிய வெளிச்சங்கள் இருட்டிய இடத்தைப் பகலாக்கின. எங்கும் வெளிச்சம்! 4 நிமிடங்கள் உருண்டோடின. காத்திருந்த மக்களுக்கு இன்னும் பதில் கிடைத்தபாடில்லை. சற்றுப்பொறுத்துப் புகைவந்தது. அதிகம்அல்ல. வந்தபுகை வெள்ளையா? அல்லது கறுப்பா? என்ற கேள்வி எழுந்தது. வெள்ளையும்அல்ல, கறுப்பும்அல்ல, சாம்பர்நிறம்தான் என்பதே பலருடையவும் எண்ணம். சிலர் கறுப்பென்று கூறிவிட்டு வெளியேற முயன்றனர். ஆனால், போகமுடிந்தாற்தானே! அந்தி ஒளிமாத்திரம் சாடையாக இருந்தது. புகைப்போக்கி வானத்தைப் பின்அமைப்பாகக் கொண்டிருந்தபடியால், முனைப்பொளிகள் (Spot Lights) இருந்தும் புகையின்நிறத்தை அறியமுடியவில்லை. மக்கள் ஆவலுடன் பொறுத்துநின்றார்கள். ஆலய சதுக்கத்தைநோக்கி இன்னுமே அநேகர் சரிந்துகொண்டிருந்தனர். சிலர் புகை 'வெள்ளை' என்று சப்தமிடத் தொடங்கிவிட்டனர். எங்கும் அங்கலாய்ப்பு! வெகுசொற்ப புகைமாத்திரம் வந்தகாரணம் என்ன? முதற் சமுசயக்குறி!

இவ்வளவு நேரமும் அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்தில் வெளிச்சம் ஏற்றப்பட்டிருக்கவில்லை. பின்னர் சடுதியாக ஒருவெளிச்சம் காணப்பட்டது. முகப்பிலுள்ள இடை மாடிக்கு இடதுபுறத்திலுள்ள இரண்டாவது சன்னலில இருந்து கம்பீரமாக ஒளி வீசியது. இது இரண்டாவது சந்தேகக்குறி! மக்கள் கரகோஷஞ் செய்தார்கள்.

சடுதியாக வத்திக்கானில் பணிசெய்வோர் தூண்வரிசைக்கு மேலுள்ள இடத்திற்குக் குத்தோட்டமாய் ஓடிவந்தனர். அவர்களும் கருதினால்மாரைப்போலவே தேர்தல் தொடங்கிய அன்றுதொட்டு வெளிஉலகத் தொடர்பற்று இருந்தவர்கள். வெளியிலே காத்திருந்த மக்களுக்குச் சைக்கினைகள் காட்டினார்கள். ஆனந்தம் அடைந்தவர்களைப்போல மற்றவர்களுக்குத் தங்களைக் காட்டினார்கள். அவர்களின் செயல்களெல்லாம் பாப்பரசர் ஒருவர் தெரியப்பட்டுவிட்டார் என்பதை உறுதிப்படுத்தின. அவற்றைக்கண்ணுற்ற மக்கள் இன்னும்கூடிய ஆரவாரம் செய்தார்கள் சதுக்கத்திலும், அதனையடுத்த வீதிகளிலும் நின்ற மக்களின் முழக்கம் வானைத்தொட்டது. அது மகிழ்ச்சியின் சின்னம். அதாவது, முத்திரை உடைத்தெறியப் பட்டுவிட்டது; தேர்தல் முடிந்தது; பாப்பரசர் தெரியப்பட்டுவிட்டார் என்பதே. இன்னுமா சந்தேகம்? வானொலி, தூரக்காட்சிமூலம் செய்தி பறந்தது—காற்று வேகத்தில் பறந்தது. வாய்மொழிமூலம் அநேகர் அறிந்தனர். நகரமாந்தர் ஓடிவந்தனர் ஆயிரக்கணக்கில்.

பாப்பரசர் ஒருவர் தெரிவு செய்யப்பெற்றுவிட்டார் என்பது ஒன்று. யார் பாப்பரசராகத் தெரிவு செய்யப் பெற்றார்? என்பது மற்றொன்று. இந்தக் கேள்விகள்தான் காற்றுடன் கலந்து நின்றன. ஏதோ சப்தம் கேட்டது. கேட்க இன்பமாக இருந்தது. அது சதுக்கத்தின் வடக்குப்பக்கத்திலிருந்து வந்தது. எட்டிப்பார்த்த பின்புதான் விஷயம் புரிந்தது. அழகிய உடையணிந்த வாத்தியஇசையாளர் போர்ப்பண் முழக்கியவாறாய் முகப்பிற்கு வந்துகொண்டிருந்தனர். மகிமைக் காவல் வீரர் அணிவகுத்துவந்தனர். நான்கு பணியாளர் இடைமாடிக்குவந்து, சன்னலின் வாயிற்படியில் திரைச்சீலைஒன்றைத் தொங்கவிட்டனர். அதில் பாப்பரசரின் முடியும், திறவுகோலும், வெள்ளைப்புறாக்களும் வர்ணந் தீட்டப்பட்டிருந்தன. ஆறுமணிக்குப் பத்து நிமிடம் இருந்தது. அர்ச். பேதுருவானவர் மகாதேவாலய மணிகள் ஆர்ப்பரித்தன. சுபசெய்தியை அறிவித்தன.

(தொடரும்)

---

### பாப்பரசரின் முதல்நடவடிக்கை

புதியபாப்பரசராகத் தாம்தெரியப் பெற்றதும் 23-ம்அருளப்பர் திருச்சபைஅரசாங்க கருமங்களைக் கவனிக்கும்பணியில் தாமதமின்றியே ஈடுபடலாயினர். தமது முதல்நடவடிக்கைகளில்ஒன்றாக, உள்ளபடியே வத்திக்கானின் பிரதமமந்திரியும், வெளிநாட்டுமந்திரியுமான 70 வயதுடையமொன்சிஞ். டொமினிக்கோ ரார்டிறிஆண்டவரை அன்றுதினமே தம்முடைய பதில் இராச்சியமந்திரியாராக நியமனஞ் செய்தருளினர். இவர் காலம்சென்ற பாப்பரசரின் ஆட்சிகாலத்திலே விசேஷப்பட்ட திருச்சபைக்கருமங்களைக் கவனிக்கும் பதில்இராச்சிய மந்திரியாராய் இருந்துவந்தார். முழுப்பொறுப்பும்வாய்ந்த இராச்சியமந்திரியாகவும், கருதினால்மார் திருச்சங்கத்திலுள்ள காலியானஸ்தானங்களை நிரப்பி அதனைப்பலப்படுத்துமாறு புதியபாப்பரசர் தம்முடையமுதலாவது கருதினால்மார் திருச்சங்கத்தைக் கூட்டியதும்ஓர்கருதினாலாகவும இவரைஆக்குவாரென்று வத்திக்கானிலே கருமமறிந்தஅதிகாரிகள் உடனேதானேகூறினார்கள். கருதினால்இராச்சியமந்திரிஉத்தியோகபதவி கடந்த 14வருடங்களாகக் காலியாய் இருந்துவருகிறது. அதற்குரிய அநேகமானகடமைகளைக் காலஞ்சென்றபாப்பரசரே ஆற்றிவரலானார்.

---

ஞான வாழ்க்கையில் முன்னேறுவதைப்பற்றி நம்பிக்கை இழந்து போகாதே; நேரம் உண்டு; கெடுவு இன்னும் முடியவில்லை.

— கிறீஸ்து. அநுசாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கார்த்திகைமாதம்

**பொதுக்கருத்து:** அப்போஸ்தலத் துவத்தில் பங்குபற்றி இல்லறவாசிகள் நாளடைவிலே அதிகமதிகமாக ஆன்மீகவளர்ச்சி பெறுவதற்காக வேண்டிக்கொள்வது.

**வேதபோதககருத்து:** லத்தீன்அமெரிக்கர் விசுவாசத்தையும், ஒழுக்கத்தையும் அழித்துவிடஎழும் ஆபத்துகளை அங்குள்ள கத்தோலிக்கஆடவர்கள் திடமுடன்எதிர்ப்பதற்காக மன்ருடிக்கொள்வது.

சத்திய வேத

# பாதுகாவலன்

1958-ம் ஆண்டு
கார்த்திகைமாதம் 20-ந் திகதி

## சொல்லுவார் சொன்னால்...

சோவியற்ருஷியாவிலே அப்போதுநடைபெற்ற அந்தப்பயங்கர இரத்தப்பிரவாக ஐப்பசி புரட்சியாகிய பிரலாபகரமான அரசியற்புரட்சியின் 41-ம்ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாடுமுகமாக அன்றுகொழும்பிலே ஓர் பகிரங்ககூட்டம் நடந்தேறியது. அதிலே இலங்கைஅரசாங்கத்தினிடமாகஇருந்துவருகிற ருஷியஸ்தானிகரான திரு. யக்கோலெவ்என்பார் நிகழ்த்தியசொற்பொழிவுபற்றிய அறிக்கையைப் பத்திரிகைகளிலேபடித்தபோது, "சொல்லுவார்சொன்னால் கேட்பார்க்கு மதியில்லையா?" என்ற சுலோகந்தான் நமதுமனதில் வரலாயிற்று. ருஷியஸ்தானிகராகியஅவர் தமதுசுவநாடாகிய ருஷியாவையும், தம்மைஅனுப்பிவைத்த ருஷியஅரசாங்கத்தையும் இத்தகைய ஓர் ஆண்டு நிறைவுவிழாவில் நயந்துபேசக் கடமைப்பட்டவரே. ஆனால், தம்முடையபேச்சில் பொய்மெய்க்கலப்பு இருக்குமோவெனப் பிறர்சந்தேகிப்பார்களோ என்ற சிந்தனையின்றியே—எவரேனும் ஆட்சேபிப்பார்களோ என்ற அச்சமின்றியே அப்படியெல்லாம்பேசிய அவரின் துணிவுக்குப் பதக்கசன்மானம்அளிக்க எவரும் முன்வராதது இரங்கத்தக்கதே. அவர் தனதுசொற்பொழிவிலே எடுத்துக்கூறிய பல்வேறுவிஷயங்களில்ஒன்று, "சோவியற்மக்கள் தங்களது வாழ்க்கைமுறையை ஏனையமக்கள்மீது பலவந்தமாகத்திணிக்க விரும்புவதில்லை"என்பதே. இவ்விதம்கூறிய ருஷியஸ்தானிகர் சோவியற்மக்களின் அந்த "வாழ்க்கைமுறை"யாதென— அந்தப்பொன்னான வாழ்க்கை முறையின் நாமதேயம் இன்னதெனக் கூறியிருப்பின் மிகநன்ருய் இருந்திருக்கும். அஃதுநன்ருயிருப்பின்— நல்லபண்டமாயிருப்பின் "பலவந்தமாகத்திணிக்க விரும்புவதில்லை" என்று அவர் வாயிலிருந்து பிறக்கவேண்டிய அவசியம் நேர்ந்திராதன்றே! விரும்பக்கூடிய ஓர்வாழ்க்கை முறையாய் இருந்தால் சோவியற்மக்கள் அதனைப் பலவந்தமாகத் திணிக்க விரும்பவேண்டியதில்லையன்றே! இதிலிருந்து அவர்களின்வாழ்க்கைமுறை விரும்பத்தகாததென்று ஏனையமக்கள் சிந்திக்க இடமேற்பட்டிருக்கிறதன்றே! ஹங்கேரியில்நடந்தேறிய அந்தத்திடுக்காட்டமான சர்வசங்காரத்தின் ஞாபகம் இன்றுநேற்று நடந்தாற்போல இன்னுமேதங்கள்மனதைவிட்டு அகலாதிருக்கும் மக்கள்சபை முன்பாக இவ்விதம்பேச ருஷியஸ்தானிகருக்கு எவ்விதம்துணிவு பிறந்ததோ தெரியவில்லை. இவ்வருடம்ஐப்பசிமாதம் ருஷிய "பெரிய சோஷலிஸ்த பெரும்புரட்சி"யின் 41-வது ஆண்டு நிறைவாக மாத்திரமல்ல, ஹங்கேரியரின் வீரசுதந்திரபுரட்சி"யின் இரண்டாவதுவருடநிறைவாகவும்ஞாபகமூட்டப்படலாயிற்று. ருஷியஸ்தானிகர் யக்கோலெவ் என்பார் கார்த்திகை6-ந்திகதியன்றே தமதுசொற்பொழிவை நிகழ்த்தினர். இற்றைக்கு இருவருடங்களின்முன் கார்த்திகைமாதம்4-ந்திகதிதான் ருஷியபடைகளும், தாங்கிளும் ஹங்கேரியுள் சமுத்திரம்போலத் திரண்டுபோய்ச் சரித்திரவரலாற்றிலே இதுவரை கண்டுகேட்டிராத சனசங்காரத்தையும், பரிநாசத்தையும் மனுத்தன்மையில்லாது மனம்போல உண்டுபண்ணிய அந்தமாபெரும் நாசச்செயல்களின் ஞாபகதினமுமாகும். அம்மட்டா! இவ்வருடம் ஆனிமாதம்16-ந்திகதியன்று — அதாவதுஇற்றைக்கு ஐந்துமாதங்களின்முன் ஹங்கேரியவிடுதலையின் சுவாலித்தெரியும் சின்னமாய்விளங்கிய இம்றே நாகிஅவர்களும், அவர்சகாக்கள்அநேகரும் குரூரத்தனமாகக்கொல்லப்பட்டதை அறியாதார்உண்டா? இன்னும் ருஷியபத்திரிகைகள் ஜனநாயகமுறையிலே நடத்தப்படுகின்றனவென்றும், அவைகள் "சம்பவங்களை உள்ளவாறு" கூறுவதில் பெயர்பெற்றனவென்றும் இந்தருஷிய ஸ்தானிகர்கூறி, அதற்கு ஓர்ஆதாரமாக ருஷியபத்திரிகைகளில் ஒன்றுக்குப் "பிறுவ்டா" — அதாவது "உண்மை"என்று பெயரிடப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கின்றுர். ஆனல், "இஸ்வெஸ்ரியா" — அதாவது "புதினம்" என்று அர்த்தமுள்ள மற்றேர் தினவர்த்தமானியும் அங்குஉண்டென்றுசொல்ல அவர்மறந்துபோனர்போலும். இலங்கைமக்களின் ஞாபகசக்தி குன்றியதாயிருக்கலாம். ஆயினும்அவர்கள் ஹங்கேரியையும், பாஸ்றர்னெக், சம்பவத்தையும் மறக்கக்கூடிய அவ்வளவு தலையில்லாதவர்கள் அல்ல. ஸ்தானிகர் எப்படித்தான்—எதைத்தான் சொன்னபோதிலும் சோவியற்மக்களின் வாழ்க்கைமுறையை இன்றைய உலகம் நன்கறியும்என்க.

---

● சிஸ்ரைன் சிற்றாலயத்திலே ஐப்பசிமாதம் 29-ந் திகதி புதன்கிழமையன்று புதியபாப்பரசருக்குக் கருதினல்மார் தங்கள்வந்தனைவழிபாடுகளைச் சமர்ப்பிக்கும் வைபவத்தின்போது சீனரான கருதினல் ரியென் ஆண்டவர் தூக்கிச்செல்லும் கட்டில்ஒன்றில் அங்கு கொண்டுபோகப்பட்டார். அப்போது கருதினல்ஆண்டவர் புதியபாப்பரசரைக் கட்டித்தழுவுவதற்காகக் கட்டிலிலிருந்து எழுந்திருக்க ஆவற்பட்டார். ஆனல், பாப்பரசர் அவரைஎழுந்திருக்கவிடாது, தமதுசிம்மாசனத்திலிருந்து கீழேஇறங்கிச்சென்று முழந்தாளிட்டு அவரைத் தழுவிக்கொண்டார்.

# வத்திக்கான் இராச்சியம்

வத்திக்கான் ரோமைநகரின் ஒரு பகுதியாகும். ரோமைநகர் வடக்குத்தெற்காக ஓடும் தைபர்நதிக்கரையின் இருமருங்கிலும் ஏழு சன்றுகளின்மீது கட்டப்பட்டுள்ளது (குன்றுகள்என்றல் சாதாரணமாக நாம்எண்ணுவதுபோல் பெருங்கற்பாறைகள் அல்ல. பெரிய விசாலமான மேடுகள். இந்தமேடுகள் எங்கேமுடிகின்றன? எங்கேதொடங்குகின்றன? என்பதை நகர் வழியாகச் செல்லுகையில் உணரமுடியாது). வத்திக்கான்நகர் முன்சொன்ன நதியின் வலப்புறத்திலே,அவ்வேழுகுன்றுகளுள் ஒன்ருகிய பொன்குன்றின்மீது (Mons Aureus) ரோமையின் மேற்குப்பகுதியாக அமைந்திருக்கின்றது.

வத்திக்கான்என்றபெயர் ஜோசியம் என்று பொருட்படும் 'வாத்திச்சீனியும்' (Vaticinium)என்ற சொல்லிலிருந்து பிறந்ததாகக்கேள்வி. பண்டைக்கால அஞ்ஞானரோமர்கள் அங்கு அதிகமாக ஜோசியம் பார்த்தார்கள் போலும். முதல்கிறிஸ்துவர்களுள் பலர் (உதாரணமாக, அர்ச். இராயப்பர்) மெய்ம்மறைக்குச்சான்றுபகர்ந்து உயிர்துறந்து நிறைபுகழும், நித்தியமுடியும் பெற்ற இடம்இது. அவர்களின்புனித இரத்தம் கத்தோலிக்கமறையின் இன்றையமத்தியதலமாய் வத்திக்கானுக்கு வித்தாக இருந்திருக்கின்றது.

14-ம்நூற்றுண்டின் ஆரம்பம்வரை பாப்பரசர்கள் தங்கியிருந்தஇடம் வத்திக்கான்அல்ல, ரோமாபுரியின்மற்றோர் பகுதியிலுள்ள லத்தறன் அரண்மனை. 1309-ம்ஆண்டிலிருந்து,1377-ம்ஆண்டுவரை அவர்கள் பிரான்ஸ்தேசத்திலுள்ள அவிஞ்ஞோன்நகரில் தங்கியிருந்தார்கள். அங்கிருந்து 1377-ம்ஆண்டு ரோமைப்பதிதிரும்பிய 11-ம்கிறகோரியார்எனும் பாப்பானவர் வத்திக்கானைத் தமதுஇருப்பிடமாகத் தெரிந்துகொண்டார். அந்நாள்முதல் இந்நாள்வரை வத்திக்கான் நகரம் பாப்பரசர்களின் உறைவிடமாய்விளங்கிக் கலையிலும், அழகிலும் வளர்ந்துவந்துள்ளது.

இன்றைய வத்திக்கான்இராச்சியம் எவ்வாறுஉருவாயிற்று என்பதுபற்றிச் சிலசரித்திரக்குறிப்புகளை முதலில்தருவது நலமாயிருக்கும். கொன்ஸ்தந்தீன் சக்கிரவர்த்தியின் காலத்திலிருந்து (கி. பி. 313) பாப்பரசர்களின் செல்வாக்குப்பெருகத்தொடங்கிற்று. கி. பி. 572-ம்ஆண்டு 2-ம்முடியப்பர் எனும் பாப்பானவர்காலத்திலே அவர்களின் லௌகீகஆட்சிஆரம்பமானது. நாளுக்குநாள் எல்லையில் வளர்ந்துவந்து, கி. பி. 728-ம் ஆண்டு ரோமாபுரிமுழுவதும் அவர்களின் ஆட்சிக்குட்பட்டது. ஒருகாலத்திலே இத்தாலியின் ஒருபெரும் பகுதியைப் பாப்பரசர்கள் முடிமன்னராய் ஆண்டுவந்தனர். அந்தக்காலம் போய்ப் 19-ம்நூற்றுண்டில் அவர்கள் தங்களது நிலஆட்சிமுழுவதையுமே இழக்கநேர்ந்தது. 1870-ம் ஆண்டு இத்தாலியபடைகள் ரோமையையும், அதன் சுற்றுப்புறங்களையும் கைப்பற்றிக்கொண்டன. 1870-ம் ஆண்டிலிருந்து 1929-ம்ஆண்டுவரை பாப்பரசர்கள் வெளியேசெல்லமுடியாது வத்திக்கானுக்குள்ளேயே சிறையிலிருப்பவர்கள்போல் அடங்கிவாழ்ந்துவந்தார்கள். 11-2-29-ம்ஆண்டு இத்தாலிய அரசாங்கத்திக்கும், திருச்சபைக்குமிடையே ஏற்பட்டசமாதான உடன்படிக்கைப்படி, வத்திக்கான் பூரணசுதந்திரம் பெற்றது. பாப்பரசர் சுயஆட்சிபெற்ற அரசர்என்பதை இத்தாலியஅரசாங்கம் ஏற்றுக்கொண்டது. இன்று பாப்பரசரின் ஆளுகைக்குட்பட்டிருக்கும்பிரதேசங்கள் வத்திக்கான் நகரமும், ரோமாபுரியிலும், பிறவிடங்களிலுமாக ஆங்காங்குள்ள ஒருசில இடங்களும், கட்டடங்களும் (Extra-Territorial). உலகிலேயே மிகச்சிறியஇராச்சியம் வத்திக்கான்.

இதன்பரப்பு 109 ஏக்கர்தான். பலநாடுகளைச்சேர்ந்த சுமார் 1,000 மக்கள் இங்கு வசிக்கின்றுர்கள். இவர்களுள் "வத்திக்கான் குடிமக்கள்" என்ற உரிமை பெற்றவர்கள் 700 பேர்தான். இந்தஉரிமை பிறப்பால் கிட்டுவதல்ல. பாப்பரசரால் அருளப்படுவது. கருதினல்மார்யாவரும் வத்திக்கானின் பிரசாவுரிமை பெற்றவர்கள். வத்திக்கான்வாசிகளுக்கு வரியுமில்லை, வாடகையுமில்லை.

வத்திக்கானுக்கென்று தனிப்பட்ட தந்தி-தபால் போக்குவரத்துமுறையும், நாணய செலவாணியும், வானொலி நிலையமும், தூரக்காட்சி (Television) நிலையமும், புகைவண்டி நிலையமும், பொலிஸ் பந்தோபஸ்தும், நீதிமன்றங்களும் (சிவில், கிறிமினல் ஆக இரண்டு) இருக்கின்றன. உலகின் பல்வேறு நாடுகளோடும் நேரடியான உறவும், போக்குவரத்தும், வாணிபமும் வைத்துக்கொள்ள வத்திக்கானுக்கு உரிமை உண்டு. 53 நாடுகளோடு வத்திக்கான் அரசியல்உறவு கொண்டுள்ளது. ஸ்தானிகர்களைப் பரிமாறிக்கொண்டிருக்கிறது.

நகரஆட்சியை நடைமுறையில் கவர்னர்ஒருவர் கண்காணித்துவருகின்றுர். பலதுறை அலுவலர்கள் அவருக்கு உதவி புரிகின்றனர். நகரில் ஒழுங்கீனம் நிகழாது பார்த்துக்கொள்ளும் பொறுப்பு காவலர்களுடையது. சுவிற்சர்லாந்து தேசத்திலிருந்து பொறுக்கியெடுக்கப்பட்ட படைவீரர் அடங்கிய "சுவிஸ்காட்" என்ற காவலர் குழு நகரபாதுகாப்பைக் கவனித்துக் கொள்கின்றது. விழாச் சிறப்பிற்கும், அரண்மனை அழகிற்கும், மரியாதைப் பணிகளுக்கும் "நோபிள் காட்", "பாலற்றைன் காட்" என்ற காப்பாளர் குழாங்கள் இருக்கின்றன. இந்தக் காவலர், காப்பாளர்களின் உடையழகும், முடியழகும், ஆயுதங்களின் ஒளியழகும் கண்ணைக்கவர்வன. இரு சாவிகளுக்குமேல் அமைந்த மும்மகுட உருவமே வத்திக்கான் இராச்சியத்தின் கேடையச்சின்னம்.

நகரைச்சுற்றிலும் உயர்ந்த சுவர் செல்கின்றது. முகப்பிலே வத்திக்கான் நகரின் ஓர்பகுதியாய் அர்ச். இராயப்பரின் மகாதேவலயமும், அதன் சதுக்கமும் அமைந்துள்ளன. கலைவளம் சிறந்த, விழிகளுக்கு விருந்தளிக்கும் பேரெழில்மிக்க பிரமாண்டமான இந்த ஆலயம் கிழக்குநோக்கி நிற்கின்றது. ரோமைநகரையும், கீழ்த்திசை நாடுகளையும் பார்த்தவண்ணம் வானளாவி உயர்ந்துநிற்கின்றது. அதற்கு இடது பக்கத்தில் பலஅடுக்கு மெத்தைகளைக் கொண்ட அரண்மனைக் கட்டடங்கள் இருக்கின்றன. வத்திக்கான் இராச்சியம் உலகிலேயே மிகச்சிறிது. ஆனல், வத்திக்கான் அரண்மனை உலகிலே மிகப்பெரிது. இவ்வரண்மனையின் உறுப்புக்கள் பல. அவையாவன: பாப்பரசரின் உயர்ந்தமாளிகை, கலைமாடங்கள் (Raphael's Rooms), சித்திரகூடங்கள் (Picture Gallery), சிற்றாலயங்கள், (சிறப்பாகப் பாப்பரசரது சிஸ்ரைன்சிற்றாலயம், இங்குதான் பாப்பரசரின் தேர்தலுக்கான வாக்கெடுப்பு நடைபெறுகின்றது) உலகப்பிரசித்திபெற்ற பொருட்காட்சிச் சாலைகள், புத்தகசாலைகள், பலதரப்பட்ட முற்றங்கள், நகரகாவலரும், மகிமைக்காவலரும் தங்கியிருக்கும் படைத்தலங்கள். இவ்வாறு வத்திக்கான் அரண்மனையில் மட்டும் 1,500 அறைகளும், கூடங்களும், நடைகளும், ஆலயங்களும், 20 முற்றங்களும் உள. இவைகள் ஒவ்வொன்றையும்பற்றி ஒவ்வோர் கட்டுரை வரையலாம். இவையன்றி வத்திக்கான்நகரில் இன்னும்பல கட்டடங்கள்உள. அர்ச். அன்னம்மாளின் பங்குக்கோயில், புத்தகநிலையம்(வத்திக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாத்திமா வெற்றிக்கேடயம்

பாத்திமா வெற்றிக்கேடய உதைபந்தாட்டப்போட்டிகளின் இறுதிஆட்டப் போட்டியானது மன்னார், சென்சேவியர்கல்லூரி மாணவர்கோஷ்டிக்கும், கொழும்புத்துறை, சஞ்சூஸ் சயப்பர் சாதனுபாடசாலை மாணவர்கோஷ்டிக்குமிடையே சென்ற 10-11-58திங்கட்கிழமை சஞ்சூஸைசயப்பர் சாதனுபாடசாலை விளையாட்டுத்திடலிலே உற்சாகமாகநடைபெறலாயிற்று. அதனைக் கண்டுகளிக்கப் பெருந்திரளானோர் குழுமியிருந்தனர். போட்டி ஆரம்பமாகிச் சிறிதுவேளையின்பின் மன்னார்க் கோஷ்டி அடுத்தடுத்து இருகோல்கள் போட்டது. இடைவேளையின்பின் சஞ்சூஸைசயப்பர்கோஷ்டி ஓர் கோல் போட்டது. பின்னர்சிறிதுவேளையில் மன்னார்க் கோஷ்டி மற்றும் மூன்று கோல்கள்போட்டது. அதன்மேல் எந்தக்கோஷ்டியும் கோல் போடவில்லை. போட்டிமுடிந்ததும் இதற்கென அமைக்கப்பட்டிருந்த ஓர்மேடையில் கேடயம்வைக்கப்பட்டுக் குருவர்கள்இருவரும், கிறிஸ்தியன் பிறதர் ஒருவரும், ஆசிரியர்கள் பலரும் மாணவர்களும், உதைபந்தாட்ட ரசிகர்களும் சமூகமாகச் சிற்றுண்டி உபசாரணையும், சொற்பொழிவுகளும் நடைபெற்று வெற்றிக்கேடயம் வண. ஏ. லெபோன்சுவாமியவர்களால் மன்னார்க் கோஷ்டிக்குவழங்கப்படலாயிற்று. மன்னார்க்கோஷ்டியின் சார்பில் ஆசிரியர் வி. வில்லியம் அவர்களும் சாதனுமாணவர் கோஷ்டியின் சார்பில் ஆசிரியர் எஸ். ஏபிரகாம் அவர்களும்உரைநிகழ்த்தினர். ஈற்றில், வண. சி.எஸ். ஐயாத்துரைசுவாமியவர்களின் நன்றியுரையுடன் கூட்டம்கலைந்தது. பாத்திமாவெற்றிக்கேடயம் முன்னர் மலாய்நாட்டில் ஸ்றேஷன்மாஸ்றராயிருந்து இளைப்பாறித் தற்போது தம்முடைய ஜனனப்தியாகிய இளவாலை, பத்தாவத்தையில் வசித்துவருகிறவரான திரு. சி. எஸ். நாயகம்அவர்களால் சன்மானிக்கப் பெற்றதுஎன்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

---

● 23-ம்அருளப்ப பாப்பரசரின் திருமுடிசூட்டுவைபவம் அர்ச். சாள்ஸ் பரோமியாரின் திருநாளாகிய நிகழும் கார்த்திகை மாதம் 4-ந்திகதி செவ்வாய்க்கிழமை — அதாவது அவர்பாப்பரசராகத் தெரியப்பெற்றுச் சரியாய் ஒருவாரத்தின்பின் நடைபெறலாயிற்று. 14-ம்நூற்றுண்டின் புராதன திருச்சடங்குமுறைப்படியே இதுநிகழலாயிற்று.

---

கான் அச்சகம் வெளியிடும் புத்தகங்களின் விற்பனைநிலையம்), தபால்நிலையம், அர்ச். இராயப்பரின் மகாதேவாலயத்தின் பின்புறமாகவிருக்கும் கவர்னர் மாளிகை, எத்தியோப்பியர் அல்லது அபிசீனியர்களுக்கெனத் தனிப்படக் கட்டப்பட்டுள்ள குருமடம், புகைவண்டிநிலையம், உயர்ந்த வேலைப்பாடுகளையும், விலைபெற்ற கருவிகளையும் கொண்ட தந்தி, வானொலி நிலையங்கள், இவற்றிற்கு இடையிடையே அழகிய பசும்புற்றரைகளையும், நறுமணப் பூஞ்செடிகளையும், அபூர்வ மரவகைகளையும், செயற்கை நீரூற்றுகளையும் கொண்ட தோட்டங்கள் அல்லது பூங்காக்கள், வளைந்துவளைந்து மேடுபள்ளங்களில் ஏறியும், இறங்கியும் செல்லும் வீதிகள்.

உல்லாசப்பிரயாணிகள் உலகின் பல நாடுகளிலுமிருந்து கும்பல்கும்பலாகத் தேனீக்களின் கூட்டங்கள்போல் வந்து குவிகின்றனர். அவர்கள் முதன்முதலாகக் கண்டுகளிக்கும் இடம் வத்திக்கான். சிறப்பாக அர்ச். இராயப்பரின் மகாதேவாலயமும், வத்திக்கான் பொருட்காட்சிச் சாலைகளுமே.

## 12-20—5-20

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

16-11-1944 அன்றுகாலை 5-20 மணிக்குத் திடீரெனத் தனக்குக் குணம் ஏற்பட்டதாக விபரமுடன் தெரிவித்தாள்.

யோசேப்பினுடைய இந்தக்கடிதமே மேஜர்இராயனையும், வண. தோமஸ்சுவாமியவர்களையும் ரோமையம் பதியில் மீளாஆச்சரியத்திற் புகுத்தியது.

இதற்கிடையில் (அதாவது மனைவியின்கடிதம் கிடைக்குமுன்னுல்) ரோமையிலிருந்து மேஜர் இராயன் அவளுக்குஎழுதிய கடிதம்வந்துசேர்ந்தது. அதிலே அவர் "உனக்கு உடல்நிலை இவ்வளவுசீர்கேடு அடைந்திருப்பதை எண்ணிஎண்ணி என் வேதனை தாங்கவில்லை. இதற்குமேலும் இங்கிருக்க எனக்குப்பிடிக்கவேயில்லை. எவ்வளவுதுரிதத்தில் லீவு கிடைக்குமோ அவ்வளவு துரிதமாக அங்குவந்துசேருவேன். ஆறுதலோடும், ஆண்டவர்மேல் நம்பிக்கையோடும் இரு" என்று எழுதியிருந்தார். அதுமட்டுமல்ல, இன்னொருவிஷயத்தையும் அவர் அதில்குறிப்பிட்டிருந்தார். அந்தவிஷயமே தூத்துக்குடியில் மிகுந்தபரபரப்புஏற்படக் காரணமாயிருந்தது. "16-11-1944 அன்றுமத்தியானம் 12-20மணிக்குப் பரிசுத்தபிதா பாப்பரசர் 12-ம்பத்திநாதரைத் தரிசிக்கும் பேறு எனக்குக்கிடைத்தது. நமதுமேற்றிராசனத்திலிருந்து பாப்பானவரின் குருத்துவகல்லூரியில் பயிலும் வண. தோமஸ்சுவாமியவர்களின் அரிய பெரியமுயற்சியாலேயே இந்தப் பாக்கியம் எனக்குக்கிடைத்தது. பாப்பரசர்முன்பாக நாங்கள்இருவரும் ஒருதனிஅறையில் நின்றோம். எனக்கு உடல்சிலிர்த்தது. ஊருக்குத்திரும்புமுன் பாப்பாண்டவரைத் தரிசித்து அவரிடம் உனக்கு ஒருபெரியஆசீர்வாதம் பெற்றுவர வேண்டுமென்றே நான்சென்றேன். அதுபோலவே பரிசுத்ததந்தை நான் ஒருஇல்லறவாசியென்று அறிந்ததும் "உமது மனைவிஎப்படியிருக்கிறாள்" என்று பரிவோடுகேட்டார். நான் உன்னுடைய அபாயகரமான நிலையைச்சொல்லி உனக்கு ஒருதனியான ஆசீர்தர வேண்டுமென்று அவரைக் கேட்டேன். உடனே பாப்பரசர் அன்போடு தமது கரத்தைஉயர்த்தி உன்னைஆசீர்வதித்தார். மொத்தத்தில்பேட்டி 7நிமிஷம் நீடித்தது. அந்தநாளை என்றும் என்னால் மறக்கவியலாது. பாப்பரசரின்ஆசிரால் நீ நலமேஇருப்பாய். விரைவில் வந்து உன்னைச் சந்திக்கிறேன்..." என்றும் மேஜர்இராயனின் கடிதத்திற் கண்டிருந்தது.

கடிதத்தைப் படித்ததுதான் தாமதம் தூத்துக்குடி *Fair Light* பெயர்லைற் என்றவீடே அமர்க்களப்பட்டது. இது அற்புதம்! 12-ம்பத்திநாதர் புதுமைவரம் பெற்றவர். இது புதுமையில்லாவிட்டால் வேறு எது அப்படி இருக்கமுடியுமென்று எல்லார் குரல்களும் ஆர்ப்பரித்தன. மகா வந். ரோச்ஆண்டவரவர்களுக்கும் நேரேசெய்திபோயிற்று. "ஆம் இதுபுதுமையாகவே இருக்கிறது" என அவர்கள் அகமகிழ்ந்து கூறினர்.

ரோமையில் 12-20 மணிக்கு மேஜர்இராயனுக்குப் பேட்டி கிடைத்தது. அப்போது தூத்துக்குடியில் மணி மாலை5-20. பேட்டியின்போது பாப்பரசர் யோசேப்பினைத் தனியாக ஆசீர்வதித்த நேரமும், அவள் குணப்பட்டெழுந்த நேரமும் சரியாகஇருந்தது.

மேஜர்இராயனும், அவர்மனைவியாரும் இன்றும் இதற்குச் சாட்சிகூறிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள்உள்ளம் பரிசுத்த தந்தை 12-ம்பத்திநாதர்மேல் நன்றியால் நிரம்பியிருக்கின்றது.

—ஞானதூதன்

---

## நீர் பாப்பரசராவது எப்போது?

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

மாக இருந்தது. ஆயின் ரொங்கல்லியோ ஒருசிறு புன்னகையை எங்கள்மேல் உதிர்ந்துவிட்டு அமைதியாகச் செல்வார்."

பரிசுத்த பாப்பரசரின் குடும்பத்தினரை நன்கறிந்த கபிரியேலா கரே கற்ருனியோ என்ற சீமாட்டி 'யூனிவேர்ஸ்' என்றபத்திரிகை நிருபரிடம் கூறியவை:-

"எனது குடும்பத்தினர் ரொங்கல்லியை நன்கறிவர். அவரில் நாம் எப்போதுமே நன்மதிப்புக் கொண்டிருந்தோம். தமது பிறப்பிடத்தை அதிகமாக நேசித்த அவர் விடுமுறைத் தினங்களைக் கழிக்க அவ்விடத்திற்கே செல்வார். அங்ஙனம் செல்லும் தினங்களில் வயல்வெளிகளிலும், திராட்சைத்தோட்டங்களின் மத்தியிலும், பெருமரச்சோலைகளின் நடுவிலும் தனித்து உலாவித் தியானஞ்செய்வது அவர் வழக்கம். புனித பிரான்சிசைப் போல இயற்கை வனப்பை நுகர்ந்து, அதன் மூலம் தேவ சிந்தனைக்குத் தம்மைத் திருப்புவது ரொங்கல்லியின் தியானமுறையாகும்.

"அவர் ஆசைகளை அதிகம் வெறுப்பவரென்றும், அவருடன் பழகுவது எவர்க்கும் எளிதான காரியமென்றும் அக்கிராமத்திலுள்ள அனைவருக்கும் நன்குதெரியும். எதையும் விரைவில் சிந்தித்து முடிவு காண்பதும், எல்லாவற்றையும் அறியவேண்டுமென்று அவர்கொண்டிருந்த அவாவும் ரொங்கல்லியை ஒரு சிறந்த தலைவனுகவும், அரசியல் தந்திரியாகவும் ஆக்கியுள்ளன.

"எனது தந்தை ரொங்கல்லி பிறந்தகிராமமான சோத்தே இல் மொன்தேவுக்கு வைத்தியஞ்செய்யச் செல்வது வழக்கம். அங்ஙனம் செல்லும்போது ரொங்கல்லியைச் சந்திப்பது அவருக்கு மிக ஆவலாயிருக்கும். ரொங்கல்லியை வழிமறித்துச் சில அன்பான வார்த்தைகளைப் பேசிச்செல்வார் என்தந்தை. அவர் குருவானபின்பும், மேற்றிராணியாரான போதும், வெனிஸ்நகரப் பிதாப்பிதாவானபோதும்கூட விடுமுறைத் தினங்களைக் கழிக்கத் தமது கிராமத்திற்கு வரும்போது என்தந்தை அவரைச்சந்தித்தால் தனது பழைய வழக்கத்தை மறந்துவிடாது சிலவார்த்தைகள் பேசிச் செல்வார். ஆயின் வெனிஸ்நகர பிதாப்பிதாவான பின்போவெனில் தனது நல்வாழ்த்துகளின் பின் 'நீர் பாப்பரசராவது எப்போது?" என்று வினவ மறக்கவேமாட்டார். அப்போதெல்லாம் ரொங்கல்லி புன்னகையுடன் தமது தலையைப் பலமாக அசைத்து 'ஒருபோதுமில்லை. அதை நான் நிச்சயமாகக் கூறுவேன்' என்று திடமாகச் சொல்லுவார்."

## விசர்நாய்க்கடி

நய்களுக்கு வெறி—அதாவது விசர் ஏற்படுவது இலங்கையில் மாத்திரமல்ல, ஏனையவெளிநாடுகளிலும் இயற்கையாகவே உண்டாகிவருகின்றது. வெறிபிடித்தவிசர்நாய்கள் மக்களைக் கடிப்பதால் அவ்வெறி மக்களுக்கும் உண்டாகின்றது. அவைகள் கடிப்பதால் மாத்திரமல்ல, உடம்பிலுள்ள வெட்டுக்காயங்களில் விசர்நாயின் விஷ உமிழ்நீர்படுவதாலும், அதன் கால்நகங்களினுல் காயப்படுவதினுலும் தீங்குவிளைகின்றது. விசர்நாய் மிருகங்களைக் கடித்தால் மக்களுக்குஏற்படும் விசரைப்போன்றே மிருகங்களுக்கும் ஏற்படுகின்றது.

நாய்களுக்கு விசர்ஏற்படுவதற்குக் குறித்தஓர்காலமில்லை. ஒருவருடத்தில் எந்தக்காலத்திலும் விசர்வரலாம். நாய்விசர் "வைறஸ்" என்னும் மிகநுண்ணியகிருமியால் உண்டாகின்றது. இச்சிறுகிருமி விசர்நாயால் கடிக்கப்பட்ட மிருகங்களின்எச்சிலிலும் காணக்கிடக்கின்றது. விசர்நாய்கடித்து விஷம் குருதியோடு கலந்துகொண்ட நாலுநாட்களில் குறிகள்தோன்ற ஆரம்பிக்கும். கடியின் ஆழம், தொகை, நிலை மிகவும்பிரதானமானவைகள். இவைகள் எவ்வளவுக்குஅதிகமாய் இருக்கின்றனவோ, அவ்வளவுக்குத் தீங்கும் அதிகமாய் இருக்கும். கை, கால்களில் விசர்நாய் கடிப்பதைவிடத் தலைக்குச் சமீபத்தில் கடிப்பது மிகமிக அபாயமானதாகும்.

வெறிநாய் அல்லதுவிசர்நாய் கண்டகண்டபொருட்கள்எதையும் கவ்வும், கடிக்கும், அடக்கமுடியாதநிலையில் விகற்பமாய் நடந்துகொள்ளும். வாயால் உமிழ்நீர்சொரிந்தவண்ணமிருக்கும். சிலநாட்கள் கடந்தபின் இந்தநிலை மாறி "ஊமை" நிலை ஏற்படும். அதன்மேல் ஒருபொருளையும், கடியாது, கவ்வாது, உண்ணுது. இந்நிலையில் சிறிதுகாலம் உயிர்வாழ்ந்து மரணமடையும்.

விசர்நாயோ அல்லது வேறுஎந்த விசர்விஷமுடைய மிருகமோ எம்மைக் கடித்துக் காயப்படுத்தினுல், உடனே வசர்க்காரநீரால் கழுவிச்சுத்தம்செய்தபின் அண்மையிலுள்ள ஆஸ்பத்திரிக்குச்சென்று நடந்தவைகளை டக்றரிடம் கூறி ஏற்றசிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும்.

கடித்தது விசர்நாயா, இல்லையா என்பதை நாயின்மூளையைப் பரிசோதித்தறியலாம், அல்லது அதைப் பத்து நாட்களுக்குக் கட்டிவைத்து அதற்கேற்படும் அறிகுறிகளை அவதானித்து அறிந்துகொள்ளலாம். இந்தவிசர்நோய் நாய்களுக்கு ஏற்படாமலிருக்க நாய்களைப்பதிவுசெய்து, விஷத்தடைமருந்து குத்திக்கொள்ளவேண்டும்.

விசர்நாய் நோயைஅகற்ற நவீன முறைகளை இப்போது கையாண்டுவருகின்றார்கள். இம்முறையை மலாயா போன்ற வெளிநாடுகளில் கையாண்டு வெற்றிகண்டுள்ளார்கள். அப்பகுதிகளில் நவீனமுறையைக் கையாண்டு இரண்டுமூன்றுவருடங்களில் விசர்நாயேஇல்லாமல் போயிருப்பதாக அறிகின்றோம். 1957-ம்ஆண்டின் சுகாதாரநிர்வாக அறிக்கையின்படி நாட்டில் சுமார்பதினோராயிரத்திற்கு அதிகமானோர் விசர்நாய்களால் கடிக்கப்பட்டுச் சிகிச்சைபெற்றார்கள்என அறியக்கிடக்கின்றது. விசர்நாய்த்தடுப்புப் புதுமுறையைக்கையாண்டிருந்தால், இக்குறையைப் பெரும்பாலும் நிவிர்த்திசெய்யமுடியும்.

எம். ஸீ. எம். ஸவ. ஹிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பு-தாண்டவன்வெளி
## திரிகோணமலை மேற்றிராசன ஐக்கியசங்க
# 31-வது ஆண்டு மகாநாடு

1958-ம் ஆண்டு ஐப்பசித்திங்கள் 23-ந்திகதிமுதல் திரிதினஆராதனைகள் ஆரம்பமாகி, அத்தினங்களிலே "கத்தோலிக்கசேவையும், மக்களும்" என்னும் பொருள்பொலிந்த சொற்பொழிவுகள் முறையே வண. எல். ஆர். அன்ரனி, வண. ரீ. செல்வராஜ் குரவர்களாலும், வந்தாறுமூலை, அரசினர் மத்திய கல்லூரிஅதிபர் திரு. பி. சவிரிமுத்து அவர்களாலும் நிகழ்த்தப்பட்டு மகாநாடுஆரம்பமானது. 26-ந்திகதிஞாயிறு கிறீஸ்துராசாதிருநாளன்று காலை 7மணிக்கு மகாவந். இக்னேசியஸ் கிளென்னிஆண்டகையவர்களால் நிறைவேறிய திவ்வியபூசையும், வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக்சுவாமிகளால் எல்லோர்மனதையும் ஈர்க்கவல்ல பொருளும், அருளும் பொதிந்ததாய்ப் பொழியப்பெற்ற ஞானப்பிரசங்கமும் மக்கள்உள்ளங்களைப் பக்திவெள்ளத்தில் மூழ்கிப் பரவசங்கொள்ளச் செய்தன. அதன்மேல் பிரதிநிதிகளுக்குத் தாண்டவன்வெளிக் கத்தோலிக்கசங்கதலைவர் திரு. எஸ். எம். தியோப்பிலஸ், காரியதரிசி திரு. எஸ். ஈ. அன்ரனி, திரு. எஸ். சவரிராஜா அவர்களதும், இவர்களின்சகாக்கள், நிர்வாகிகளினதும்பெருமுயற்சியால் காலைப்போசனம் சம்பிரமமாக அளிக்கப்பட்டது. இவர்களின் ஐக்கியமும், அயராஉழைப்பும் பெரிதும் பாராட்டப்படத்தக்கன.

பின்னர் ஆண்டுமகாநாடு மேற்றிராணியாண்டகையவர்கள் சமுகமாக, தலைவர் யோசெவ் ஜே. டேவிட்அவர்கள்தலைமையில் ஆரம்பமானது. மேற்றிராசண இராசகுரவர்அவர்கள் தமதுநல்லுரையிலே குறிப்பிட்டது வருமாறு: "இவ்வாண்டு அதிகம் சரித்திரசம்பந்தமான ஓர்ஆண்டு. எவராலும் மறக்கமுடியாத பெருவெள்ளப் பிரவாகமும், நாட்டுமக்களின் அல்லோலகல்லோலமும், அகதிகளின் பரிதாபகோலமும், மக்கள்மனதைத் திணறச்செய்த பல்வேறு இன்னல்களும்சூழ்ந்த ஓர் ஆண்டு. அம்மட்டா! அரசியற்சூழ்வளியில் அகப்பட்டஒருசில இனவெறியர்களாலும், மற்றும்காடையர், கயவர்களாலும் உந்தப்பட்டு நாட்டை இரத்தவெள்ளத்திற் குள்ளாக்கப் பிறந்த இனக்கலவரங்களும், ஊரடங்குச்சட்டமும், அவசரகாலச்சட்டமும் உண்டுபண்ணிய நெருக்கடியினுல் எண்ணரிய உயிர்ச்சேதங்கள், பொருள் அழிவுகளாலேஎக்காலத்தும் எவராலும் மறக்கமுடியாத சரித்திரநிகழ்ச்சிச் சித்திரங்களையுடைய ஓர்ஆண்டு. இந்த நெருக்கடியிலே கத்தோலிக்கருள் பெரும்பாலானோர் பாதிக்கப்படாதிருந்தபோதிலும் அயலார்அன்பு அறமெனக்கொள்ளும் உளப்பணபும், ஆபத்திலுதவும் அரும்பெரும் குணமும்படைத்த கத்தோலிக்க சேவைக்குழுவினங்கள் இல்லிட மற்று நிலைகுலைந்த அகதிகளுக்கு ஆற்றிய அரும் பெருஞ்சேவைகள், தியாகங்கள் நம்மால் பாராட்டப்படத்தக்கன.

"எல்லார்க்குமுதவும் இனியபண்புடைய கத்தோலிக்கர்யாவரும் சங்கரீதியில் இதுபோன்ற சக்திவாய்ந்த பெரிய ஸ்தாபனத்தில் அங்கத்துவந்தாங்கிஅயராதுழைத்துக் கத்தோலிக்க ஐக்கியத்தை வளர்க்கவேண்டும். உலக நாடுகளிடையே சமாதானத்தை வளர்க்க ஐக்கியநாடுகளின் ஸ்தாபனம் வழிதேடுகையில், சுதந்திரம் சுதந்திரமென்று கொக்கரித்து, ஜனநாயகத்தைக்கெடுத்து, உள்ள அற்பசொற்ப உரிமைகளையும் மக்களிடமிருந்து பறித்து, வாய்ப்பூட்டு, கைப்பூட்டு, கால்பூட்டிட்டும், பொருளாதாரம், பொருளாதாரம் என்றுமிரட்டி முதலாளிக்கெதிராய்த் தொழிலாளியையும் ஆசிரியருக்கெதிராய் மாணவர்களையும், அரசாங்கத்துக்கெதிராய்க் குடிமக்களையும், குருமாருக்கெதிராய்க் கிறீஸ்துவர்களையும்தூண்டியும் புரட்சிப்பாதையில் நடைபோட்டுச் செல்லும் சீன, போலாந்து, ரூஷியாபோன்ற கம்யூனிஸ்தநாடுகளிலுள்ள நமதுசத்துராதிகளை நாம்எதிர்க்கச் சக்தியோடும், ஐக்கியத்தோடும் ஒன்றுபட்டுழைக்கவேண்டும். இந்தச்சமதர்மவேதாந்தப்பேசும் பொதுவுடமைவாதிகள் நம்ஈழத்திலும் இடம்பெற்று வருகிறார்கள். கிறீஸ்துவர்கள் கிறீஸ்துநாதாது ஞானச்சரீரத்தின் அங்கங்கள். அவற்றில் ஒருஅவயவம் பழுதூற்றாலும் உயிர் ஆபத்தான நிலையை எய்தும். திருச்சபைக்குவரும் துன்பங்கள் நமக்குவந்த துன்பங்களாகும். ஞானஅதிகாரிகளுக்கும், குருமாருக்கும் வரும்துன்பங்களை நமக்கேவந்த துன்பங்களாகக்கொண்டு அவற்றிற்கு ஆனபரிகாரம் தேடவேண்டும்.

"நம்மிடம்தற்போது சிலபாடசாலைகளே இருக்கின்றன. இவைகளும் எப்போதுநம்மைவிட்டுப் பறிபோகுமோ தெரியாது. புதியபாடசாலைகளை அமைக்க இவ்வரசாங்கத்தால் இனிமேல் சந்தர்ப்பம்வாய்க்குமோ தெரியாது. பாடசாலைகளுக்கு மிகவும் நெருக்கிடையான சூழ்நிலைஏற்பட்டிருக்கிறது. சமீபத்திலே செய்யப்பட்ட என்றுமில்லாதபுதியவரித்திட்டச்சட்டம் நடைமுறைக்குவரவிருக்கிறது. இது திருச்சபையின் ஆஸ்திகளுக்கேயாயினும், திருச்சபைஅதிகாரிகளுடையவற்றிற்கேயாயினும் அவைகள் உண்மையில் மக்களுடையனவே. இது மக்களுக்குஏற்பட்ட வரியென்பதை நாம்உணரவேண்டும். பங்குகள்தோறும்கத்தோலிக்கசங்கம் இயங்கவேண்டும். அதில் சகலகத்தோலிக்கரும் அங்கம்வகிக்கவேண்டும். நமதுகோரிக்கைகள், எதிர்ப்புகள் பலம்பொருந்தியனவாயிருக்க நாம்ஐக்கியப்பட்டுப் பதவியை நோக்காது, பணிஆற்றுவதுநோக்கித் தலைமையைநோக்காது, அத்தலைமை அதிகாரம் எங்கிருந்துவருகிறது என்பதைநோக்கிச் சேவைபுரிய முன்வரவேண்டுமெனக்கூறி ஆசிபொழிந்தார்.

சங்கஅறிக்கைகள்வாசித்து ஏற்றுக்கொள்ளப்பட்டன. அவ்வேளை லூர்துநகருக்குத் திருயாத்திரைசெய்து சேமமே தாயகம்வந்தடைந்த சங்கதலைவர் யோசேவ் ஜே. டேவிட்அவர்களுக்கும், அவரின் பிரியபாரியாருக்கும் பாராட்டுரை வழங்கப்பட்டது.

இச்சங்கத்தில் பத்தாண்டுகளாகக் கௌரவகாரியதரிசியாகக் கடமையாற்றிய திரு. கே. எல். இராஜேந்திரம் அவர்களை அகிலஇலங்கைத் தமிழாசிரியர்சங்கம் ஆசிரியமணிப்பட்டம் வழங்கிக் கௌரவித்து, அகிலஇலங்கைத் தமிழாசிரியசங்கத்தின் தலைவராகவும் தெரிந்தமையைமுன்னிட்டு ஆசிரியமணியவர்களைச் சங்கம்பாராட்டிக் கௌரவித்தது.

அதன்மேல் கிழக்கிலங்கையிலிருந்த ஒரேயொரு அரசினர் ஆசிரியகல்லூரியைக் கல்விமைச்சு மூடஒழுங்கு செய்வதைக்கண்டித்து ஒருபிரேரணையை நிறைவேற்றியது.

சேவாமுதன்மைத்தலைவர் வண. ஈ. கிறவுதர்சுவாமிகள் தமதுநல்லுரையில், எல்லாக்கத்தோலிக்கரும் இதில் அங்கம்பெற முயற்சிக்கவேண்டும்; சேர்ந்துழைக்க யாவர்க்கும் உரிமையுண்டு எனவும், சபாநாயகர் ஒத்துழைப்பும், உண்மைக்கத்தோலிக்க சாதனையும் காட்டப்படவேண்டுமெனவும் கூறினுர்.

ஈற்றில் சங்கத்தின் அடுத்தஆண்டுப் பதவிநியமனம் ஆரம்பமானது. தற்காலிகதலைவராயிருந்து தலைவர்தெரிவை நடத்திய திரு. எஸ். தியோப்பிலஸ் அவர்களின் சமயோசிதபுத்தியும், நிருவாகஆற்றலும் பலராலும் பாராட்டப்பட்டன.

உத்தியோகநியமனம் பின்வருமாறு: தலைவர்: திரு. யோசெவ் ஜே. டேவிட். உபதலைவர்கள்: திரு. எஸ். எம். தியோப்பிலஸ், திரு. பீ. சி. ருகல், திரு. ஜே. ஏ. பீ. துரைநாயகம். கௌரவகாரியதரிசி: ஆசிரியமணி திரு. கே. எல். இராஜேந்திரம். உபகாரியதரிசி: திரு. எஸ். சவரிராஜா. தனுதிகாரி: திரு. எவ். ஆர். ருகல்.

ஈற்றில் காரியதரிசிஅவர்களால் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக்சுவாமிகளின் அயராதபணியையும், அக்கறையையும், ஒத்துழைப்பையும்பாராட்டித் தாண்டவன்வெளிக் கத்தோலிக்கசங்கதலைவர், காரியதரிசிஉள்ளிட்ட பலநிருவாகிகளுக்கும், பிரதிநிதிகளுக்கும் நன்றி கூறப்பட்டது. அன்றுமாலை "பாத்திமாகிரி"முன்றிலில் இலங்கையில் ஒருபோதும் நிகழ்ந்திராத அத்தனைச்சிரியமுறையில் சீவியச்செபமாலை திரு. எஸ். சவரிராஜா, திரு. எஸ். ஈ. அன்ரனிஎன்போரின் பெருமுயற்சியால் கட்டளைக்குரவரின் வழிகாட்டுகையில் ஒழுங்குசெய்யப்பட்டது. இதில் காரணிக்கக்காட்சிகள் இதோதேவஅன்னை இவ்வுலகில் சம்மனசுகளோடு திவ்விய பாலனைஏந்திக் களிகூர்ந்து இறங்கிவந்திருக்கிறுரோஎன்று பிரமிக்கத்தக்க வகையில் களிகூர்ந்த ஐந்துகாரணிக்கக் காட்சிகள் மிளிர்ந்தன. அழகும், ஒளியும் சொலித்தன. எண்ணற்ற பிறசமயிகளும்பார்த்துப் பக்திவசத்தரானுர்கள். அதன்பின் பாட்டுப்பிரார்த்தனையும், திவ்வியநற்கருணை ஆசீர்வாதமும்நடைபெற்றன. நவரசஇசைக்கீதங்களும், நடனங்களும், ஹாஸ்யம்பொதிந்த நடிப்புகளும்நிறைந்த சங்கீதகாலட்சேபம் மக்கள்மனதைமகிழ்ச்சியில்ஆழ்த்தி நிறைவெய்தியது.

கே. எல். இராஜேந்திரம்,
கௌரவகாரியதரிசி, தி. மே. ஐ. ச.

## தியாகசேவை புரியும்
# கன்னியாஸ்திரிமார்

மட்டக்களப்பிலிருந்து சுமார்மூன்று மைல்களுக்கப்பால் உள்ளது மாந்தீவு என்னுமொரு தீவு. இயற்கை அழகு கொழிக்கும் இந்தக்கண்கவர்தீவிலே இலங்கைஅரசாங்கம் தொழுநோயாற் பீடிக்கப்பட்டவர்களை வைத்திருக்கின்றது. கொழும்பையடுத்துள்ள ஹெந்தலை, உறுகாஎன்னும்ஏனைய இருஇடங்களிலுள்ள வைத்தியசாலைகளிலும் தொழுநோயாளர் வைக்கப்பட்டுள்ளனர். ஆனுல், அனைத்திலும்பார்க்க நோயாளருக்கு வசதியானதும், ஆரோக்கியமளிக்கக் கூடியதுமான இடம் மாந்தீவுதான். இங்குள்ள வைத்தியசாலை நிறுவப்பட்டுச் சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளாகின்றன.

மட்டக்களப்புப் பாவைக்கடலில் அமைந்துள்ள இத்தீவின்விஸ்தீரணம் தொண்ணூற்றாறுஏக்கர். இங்கு தற்போது சுமார் இருநூற்றைம்பது நோயாளர்கள் இருக்கின்றனர். இவர்களில் முப்பத்தைந்துபேர் பெண்கள். பெரும்பாலான நோயாளர்கள் சிங்களவர்களாவர்.

படகிலேறி மாந்தீவுக்கரையை அடைந்ததும் புதியதொரு உலகத்திற்கு வந்துசேர்ந்துவிட்டதைப்போல் பிரமை ஏற்பட்டுவிடுகிறது. ஜில்என்ற குளிர்ந்தகாற்று அங்குள்ள நறுமணமிக்க பூஞ்செடிகளைக்கடந்து சவுக்கு மரங்களுக்கூடேதவழ்ந்து நம்மைத் தொடுகையில், அந்தச்சுகந்தகாற்றை நாம்சுவாசிக்கும்போது, உண்மையில் அவ்விடத்தை நவீன ஏதென்தோட்டமெனப் போற்றுமல் வேறென்னவென்பது?

நோயாளர்களின் சௌகரியத்திற்காக அரசாங்கம் சகல வசதிகளையும் இந்தத்தீவில் செய்துள்ளது. தீவின் பலபகுதிகளிலும் 24சிறுவீடுகள் கட்டப்பட்டு அவற்றில்ஒவ்வொருவீட்டிலும் நான்கு நோயாளர்வீதம் வசித்துவருகின்றனர். தொற்றக்கூடியதும், சற்றுக்கடுமையுமான நோய்உள்ளவர்களை அங்குள்ள நவீன வசதிகள்கொண்ட ஆறுவாட்டுகளில் வைத்திருக்கிறுர்கள்.

நோயாளர்களுக்கு அளிக்கப்படும் உணவின்தரம் சிறந்ததாய் விளங்குகின்றது. இறைச்சி, மீன், முட்டை முதலியவைகளுடன் மரக்கறியும் இவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

மாந்தீவில் வசிக்கும்நோயாளர் சோம்பேறிகளாக இருப்பதில்லை. வைத்தியசாலைவாட்டுகளில் இருப்பவர்களைத்தவிர ஏனையோர் கமச்செய்கை, தச்சுவேலை, ஆடுமாடு, கோழிவளர்ப்பு, மரக்கறித்தோட்டச்செய்கை முதலியவற்றில் ஈடுபட்டுள்ளனர். இவற்ருல் கிடைக்கும் ஊதியத்தை அவர்கள் தங்களுக்கென வைத்துக்கொள்கின்றனர். அத்துடன் அரசாங்கம் மாதாந்தம் ஒவ்வொருநோயாளருக்கும் 'வெற்றிலை அலவன்ஸ்'என நாலரைரூபா வழங்கிவருகிறது.

மாந்தீவிலுள்ள நோயாளருக்கென ஒரு சினிமாமண்டபம் அங்குள்ளது. அறிவிற்குகந்த செய்திப்படங்கள்பல அடிக்கடி இங்கு திரையிடப்படுகின்றன. நோயாளருக்கெனத் தீவில் சைவ, பௌத்த, கிறீஸ்துவஆலயங்களும் நிறுவப்பட்டுள்ளன. இஸ்லாமியருக்கென ஒருபள்ளிவாசலும் இங்குண்டு. ஆலயங்களைப் பரிபாலிப்பதற்கென நோயாளரைக்கொண்ட வெவ்வேறுபரிபாலன சபைகளும் இருக்கின்றன. அத்தோடு வளர்ந்தவர் கல்விகற்பதற்கென ஒரு பாடசாலையும் இங்குள்ளது. ஒருநோயாளரே அங்குஆசிரியராகக் கடமையாற்றுகிறுர்.

பொழுதுபோக்குவதற்கெனப் பல வானொலிப்பெட்டிகளை அரசாங்கம் இவர்களுக்குக் கொடுத்துள்ளது. ஓய்வு நேரங்களைப் பொதுவாக வானொலி இசைகேட்பதிலும்,பத்திரிகைகள்படிப்பதிலுமே நோயாளர் செலவிடுகின்றனர்.

மட்டக்களப்புநகருடன் இத்தீவு தொலிபோன்தொடர்பு கொண்டுள்ளது. மாந்தீவுக்கானமின்சாரம் கம்பிகள்மூலமாகவும், குடிதண்ணீர் குழாய் மூலமாகவும் மட்டக்களப்புநகரிலிருந்து செல்லுகின்றன.

தொழுநோயாளரை வைத்திருக்கும் மாந்தீவிற்குச் செல்பவர்கள் அங்குகடமையாற்றும் அமெரிக்கா, பிரான்ஸ் ஆகியநாடுகளைச்சேர்ந்த கத்தோலிக்க கன்னியாஸ்திரிகளின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டாமலிருக்க முடியாது. தொழுநோய் பீடித்திருப்பவர்களுடன் அந்தஎட்டுப்பெண்களும் தாராளமாகக்கலந்து, அவர்களுக்குத் தேறுதல் வார்த்தைகள்சொல்லிக் காயங்களைக்கழுவி மருந்திடுவதைப் பார்க்கையில், "பிறர்வாழத் தான்வருந்தும் பேர்வாழ்வே வாழ்வு" என்னும் முதுமொழி மெய்யாகிறதை உணருகிறேம். சொந்தநாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால்வந்து சங்கடமான சூழ்நிலைகளுக்கிடையே கடமையாற்ற முன்வந்துள்ள இந்த அம்மணிகளது சேவைக்கு ஒன்றுமே ஈடுஇணையாகாது. இவர்களில் சிலர் மாந்தீவுவைத்தியசாலை ஆரம்பத்திலிருந்தே இங்குகடமையாற்றி வருகின்றனராம்.

மாந்தீவில் ஆச்சரியப்படத்தக்கவற்றுள் ஒன்று, அங்குள்ள சுத்தமான தெருக்கள்தான். ஒருவித குப்பைகூளத்தையேனும் அங்குகாண்பது கடினம். அவ்வளவுசுத்தமாய் இருக்கிறது அந்தத்தீவு.

ரீ. பாக்கியநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதவீரர் பக்கம்



*அருமைச் சகோதரங்களே!*

இன்று எமது கலாசாலைக்கு வைத்திய அம்மா ஒருவர் வந்தார். சிரேஷ்ட வகுப்பு மாணவரைச் சந்தித்துச் சொற்பொழிவு செய்தார். எதைப்பற்றி எனக் கேட்கிறீர்களா?

க்ஷயரோகத்தைப்பற்றிப் பேசினுர்கள் வைத்திய அம்மா. அது நம்மை அறியாமலே தொற்றிவிடக்கூடிய வியாதி. அது ஊத்தை, காற்றும் சூரிய வெளிச்சமும் புகமுடியாத அறைகள், போஷாக்கற்ற உணவு அருந்தும் மக்கள் உள்ள இடங்களில் இலகுவாகப் பரம்பும்.

முற்காலத்தில் க்ஷயரோகத்திற்கு மருந்திருக்கவில்லை. இக்காலத்தில் க்ஷயரோகக் கிருமிகளைக் கொல்லவும், அந்நோய் பிடித்தவர்களைக் குணப்படுத்தவும் வழி அறிந்துவிட்டார்கள். ஆகவே வைத்தியரிடஞ் சென்று பரிசோதிப்பித்து தகுந்த சிகிச்சை செய்விப்பது அவசியம்.

இக்கொடிய நோயை எமது சமூகம் வெறுக்கிறபடியால் இதை வெளியிலே காட்ட மக்கள் விரும்புவதில்லை. ஆயினும் தகுந்த சிகிச்சை செய்ய வைத்தியரிடங் காட்டவேண்டும். வெட்கப்படவேண்டியதில்லை. வெட்கப்பட்டு மறைத்துவைப்பது மூடத்தனம்; சமூகத் துரோகமுங்கூட.

உங்கள் சூழலில் இந்நோய் பரவவிடாமற் தடுக்கவும், நோயுற்றவர்கள் சிகிச்சை பெறவும் உதவுகிறீர்களா?

அண்ணு.

—*—

# எமது புதிய பாப்பரசர்

(அனு, அ.— திருக்குடும்பக் கன்னியர்மடம்)

திருச்சபையின் மகத்தான தலைவராக—கத்தோலிக்க மக்களின் அன்புத் தந்தையாக—சிறந்த அரசியல் இராச தந்திரியாக உலக நாடுகளின் நன்மதிப்பைப்பெற்றுச் சமாதானத்திற்காக அயராதுழைத்த பரிசுத்த தந்தை 12-ம் பத்திநாத பாப்பரசர் மறைந்தது உலக மக்களுக்கு—விசேஷமாகக் கத்தோலிக்க சமுதாயத்திற்கு மாபெரும் ஆகுலமாகும். அவரினிடமாகப் பரிசுத்த தந்தை 23-வது அருளப்பர் என்னும் பாப்பரசர் பதவியேற்றிருக்கின்ருர்.

இன்றைய உலகின் நிலை மிகவும் கேவலமானது. ஆடம்பர வாழ்விலே திளைத்து அதன் இன்பசுகபோகங்களைச் சுவைக்க எத்தனிக்கின்றது. மாயை, பகட்டு, பீதாம்பரம் என்பவற்றில் மயங்கி அதில் மூழ்கியிருக்கின்றது. நித்திய கடவுளை விஞ்ஞானத்தைக்கொண்டு அழிக்கக் கங்கணங் கட்டுகின்றது. ஆத்திகத்தை அழித்து நாத்திகத்தை வளர்க்க முயல்கின்றது. போர்களும், அடக்குமுறைகளும், ஆயுத உற்பத்திகளும் மலிந்து உலகை அந்தகாரத்தில் அமிழ்த்த முயற்சிக்கின்றது. இவ்விதமான இடுக்கண்கள் மத்தியில் தான் — எல்லையற்ற எதிர்ப்புகளின் மத்தியில்தான் புதிய பாப்பரசராகக் கருதினுல் ஆஞ்சலோ யோசவ் ரெருன்கல்லி ஆண்டவர் பதவியேற்றிருக்கின்ருர். மேற்கூறிய தீமைகளும், மாயைகளும் நிறைந்த உலகம் என்னும் பெருங்கடலிலே திருச்சபை என்னும் கப்பலைச் செலுத்தி மோட்சகரைசேர்க்கும் மீகாமனுகக் கருதினுல் ரெருன்கல்லி ஆண்டவர் பதவியேற்றுள்ளார். அவர் தமது நாமமாக 23-வது அருளப்பர் என்னும் பெயரைத் தெரிந்தெடுத்துக்கொண்டார். 400 வருடங்களுக்கு மேலாக அருளப்பர் என்ற பெயரைப் பாப்பரசர்களாகத் தெரியப்படும் எந்தக் கருதினுலும் தெரிவு செய்ததில்லை. இப்பெயரைத் தெரிந்தெடுத்து இந்தப் பெயருக்கு நற்புகழ் எடுப்பதற்காகவும், யேசுநாதரால் இவ்வுலகில் மிகவும் நேசிக்கப்பட்டவரின், அன்பின் அப்போஸ்தலரின் நாமம் அருளப்பர் என்பதனுலேயும் தாம் அருளப்பர் என்னும் பெயரைத் தெரிந்ததாகவும் அவர் கூறுகின்ருர். “நீ இராயாய் இருக்கின்ருய் இந்த இராயின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்” என்று யேசுநாதர் வாக்குப்பண்ணியபடியே அர்ச். இராயப்பரின் சிம்மாசனத்தின் அணைந்த ஜோதிக்குப் பதிலாக 47 கோடி கத்தோலிக்கமக்களின் தலைவராக யேசுவின் பிரதிநிதியாக 23-வது அருளப்பர் என்னும் புதிய பாப்பரசர் சிம்மாசனம் ஏறியுள்ளார்.

நானூற்றிமுப்பத்தைந்து வருடகாலச் சம்பிரதாயப்படி ஒரு இத்தாலியரே பாப்பரசராகத் தெரிவுசெய்யப்படுவது வழக்கம். நமது புதிய பாப்பரசரும் இத்தாலியைத் தமது தாயகமாகக் கொண்டவரும், வெனிஸ் மாநகரின் பிதாப்பிதாவுமாவர். எழுபத்தாறு வயதுடைய புதிய பாப்பரசர் ஒரு விவசாயியின் மகனுக 1881-ம் வருடம் நவம்பர் மாதம் 25-ந் திகதி பிறந்தார். அப்பொழுது அவருடைய பெற்றோர் வட இத்தாலியில் பெர்காமோ என்ற இடத்திற்கு அருகிலுள்ள ‘சொட்டோ இல் மொண்டே’ என்ற கிராமத்தில் விவசாயம் செய்து வாழ்ந்துவந்தனர். இளவயதிலேயே—இயற்கையின் இன்பத்தை விரும்பி ரசிக்கும் காளைப் பருவத்திலேயே தன்னைத் தேவதொண்டிற்குக் கையளித்தார். கருதினுல் பதவிமட்டும் உயர்த்தப்பட்டார். வெனிஸ் நகரின் பிதாப்பிதாவாகவும் நியமிக்கப்பட்டார். தூரகிழக்கில் பாப்பரசரின் பிரதிநிதியாகவும் கடமையாற்றியுள்ளார். பாரிஸிலும் பாப்பரசரின்பிரதிநிதியாகக் கடமையாற்றி இருக்கின்ருர்.

புதிய பாப்பரசரின் முடிசூட்டு விழாவிற்கென்று உலகின் பலபாகங்களிலுமிருந்து மன்னர்களும், இளவரசர்களும், பிரதம மந்திரிகளும், மற்றும் பிரமுகர்களும் வத்திக்கான் சென்று விழாவிற் கலந்துகொண்டனர். சுமார் 50 ஆயிரம்பேர் கூடியிருந்தனர். திருச்சபையின் பரம்பரைச் சம்பிரதாயப்படி அர்ச். பேதுருவானவரின் தேவாலயத்தில் முடிசூட்டும் விழா ஆடம்பரமாக நிறைவேறியது. கத்தோலிக்க உலகம் எங்கும் விழாக் கொண்டாடப்பட்டது. உலகம் எங்கணும் பரவியிருக்கும் சகல கத்தோலிக்க மக்களும் தம் புதிய தலைவருக்கு அஞ்சலிசெய்தனர். புதிய பாப்பரசருக்குக் கத்தோலிக்க உலகம் சுபமங்களங்கள் சாற்றியது. அகில உலகிலிருந்தும் சுபசெய்திகள் அனுப்பப்பட்டன.

புதிய பாப்பரசர் சமாதானத்தையும், நீதியையும் விரும்புபவர் என்பதை அவர் உலகுக்கு அளித்த முதல் வானெலிச் செய்தியே புலப்படுத்துகின்றது. புதிய பாப்பரசருக்குச் சமயக் கோட்பாடுகளிலும், அரசியலிலும் நல்ல அனுபவம் உண்டு. எதேச்சாதிகாரத்தை எப்பொழுதும் வெறுப்பவர். மிகத்தமாஷாகப்பேசி எவரையும் வசிகரிக்கும் தன்மையுடையவர்.

அவர் புதிய பாப்பரசராகத் தெரியப்பட்ட நேரம் முதற்கொண்டே தேவனுடைய கரங்களில் இருந்து அச்சத்துடன் சிலுவையை ஒத்த மாபெரும் பாரத்தைப் பெற்றுக்கொண்டார். 47 கோடிகத்தோலிக்க மக்களின் ஆன்மீகத் தலைவனுகப் பதவியேற்று மிகப்பெரும் பளுவைச் சுமந்துகொண்டார். நாத்திகத்தை அழித்து ஆத்திகத்தை வளர்க்கும் திருப்பணியினை ஏற்றுக்கொண்டார். பொதுவுடைமையையும், பொதுவுடைமைவாதிகளையும் செயிக்கும் கஷ்டமான செயலை மேற்கொண்டுவிட்டார். உலகில் கத்தோலிக்க சமயத்தின் வளர்ச்சிக்காகவும், கத்தோலிக்க மக்களின் நலனுக்காகவும், அகில உலகின் சமாதானத்திற்காகவும் சகல தீமைகளையும், எதிர்ப்புகளையும்சாதுரியத்தினுலும், சாமர்த்தியத்தினுலும், சமயோசிதத்தினுலும், இராஜதந்திரத்தினுலும், தியாகத்தினுலும், அன்பினுலும் அடக்கி மெய்யான வழிகாட்டியாகத் திருச்சபையின் தலைவனுக இருக்கவேண்டிய மாபெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுவிட்டார். சுருங்கச் சொல்லின் பாப்பரசராகப் பதவியேற்றுச் சுமக்கமுடியாதசுமையைத் தாங்கிக்கொண்டார்.

நமது மேய்ப்பன் பல்லாண்டு காலம் திருச்சபை என்னும் கப்பலைச் செலுத்திச் செல்லும் மீகாமனுக இருக்க அருள்புரியுமாறு இறைவனை வேண்டுவோம். அத்துடன் திருச்சபையின் கடமைகளை எவ்வித எதிர்ப்புச் சக்திகளின்றிச் செவ்வனே ஆற்றவும், அவர் மேற்கொள்ளும் காரியங்கள் நனிசித்தி பெறவும் கர்த்தனை நோக்கி மன்ருடுவோம்.

பல்லாண்டுவாழ்க நமதுபாப்பரசர்!

—*—

# இடையனும் ஆட்டுக்குட்டியும்

ஜேர்மனியைச் சேர்ந்த கிராமம் ஒன்றில் ஒருசிறு கத்தோலிக்க குடும்பம் இருந்தது. தனவந்தர்களான கணவனும், மனைவியும் பெயருக்கு மாத்திரம் கத்தோலிக்கரேயன்றிச் சத்தியவேதானுட்டானத்தில் சிறிதேனும் கவலையில்லாது வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு ஒரே ஒரு குழந்தை மாத்திரம் இருந்தது. பெற்ருேரின் துர்மாதிரிகையைப் பின்பற்றிப் பிள்ளையும் கெட்டுப் போகாதபடி சர்வேசுரன் அந்தப் பிள்ளையைத் தம்மிடம் அழைத்துக் கொள்ளச் சித்தமானுர். இதனுல் ஆருத்துயருற்று வருந்திய தாய், தந்தையர் இருவரும் விசாரணைப் பங்குக் குருவானவரிடம் சென்று: “சுவாமி, கடவுள் நல்லதகப்பன்; ஒவ்வொருவரையும் தமது சொந்தப் பிள்ளையாகப் பாவித்து நேசிக்கிருர் என்று தாங்கள் அடிக்கடி சொல்வதைக் கேட்டிருக்கிருேம். அப்படியானுல் அவர் எங்கள் ஏகபுத்திரனை ஏன் எடுத்துக்கொண்டு, சீவியகால முழுதும் நாங்கள் நிர்ப்பாக்கியராக வாழும்படி செய்திருக்கிருர்” என்று பதட்டமாய்ப் பேசினுர்கள். குருவானவர் மிகவும் அன்புடனும், அனுதாபத்துடனும் அவர்களை நோக்கி: “நான் சொல்வதைப் பொறுமையோடு கேளுங்கள். ஓர் இடையனுக்கு அநேக ஆடுகள் இருந்தன. ஒருநாள் நல்லதீனி தயார்செய்து தன் வீட்டில்போட்டு ஆடுகளை உள்ளே வரும்படி அழைத்தான். நல்ல உணவு இருக்கிறதென்று அறிந்தும் ஓர் ஆடுகூட உள்ளே பிரவேசிக்கவில்லை. இடையன் ஆட்டுக்கிடையில் நுழைந்து தனக்குப்பிரியமான ஒரு சிறு ஆட்டுக்குட்டியைத் தூக்கித் தன் மார்போடணைத்து உள்ளே கொண்டுபோய்விட்டான். இதைப் பார்த்ததும் மற்ற ஆடுகளெல்லாம் வீட்டுக்குள் நுழைந்து தயார்செய்யப்பட்டிருந்த இனிய உணவைப் புசித்தன. இதேபோல் நமது நல்ல ஆயனுகிய திவ்வியயேசு நமக்காகத் தமது பரலோக வீட்டில் நல்லுணவு சித்தஞ்செய்து வைத்துக்கொண்டு நம்மெல்லோரையும் தம்மிடம் அழைக்கிருர். ஆனுல், அநேகர் அவரிடம் போக மறுத்து, அழிந்துபோகும் இவ்வுலகநன்மைகளையேதேடித் திரிகிருர்கள். நீங்கள் உங்கள் முழு இருதயத்துடன் நேசித்த உங்கள் அருமைக் குழந்தையைத் தமது வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோய் விட்டார். நீங்களும் உத்தம கிறீஸ்தவர்களாய் ஒழுகிப் பரலோக இல்லம் சென்று உங்கள் செல்வக் குழந்தையோடுசேர்ந்து தம்மை எக்காலமும் சுகித்து அநுபவிக்கவேண்டுமென்பதே அவருடைய ஆவல்” என்ருர். பிள்ளையை இழந்த பெற்ருேர் இருவரும் குருவானவர் சொன்ன நற்புத்தியின் கருத்தை நன்குணர்ந்து தங்கள் அசட்டைத்தனத்தை விட்டொழித்து நல்ல கிறீஸ்தவர்களாய் மனநிம்மதியுடன் வாழ்ந்தார்கள்.

---

● 12-ம்பத்திநாத பாப்பானவர் காலஞ்சென்றபோது அவரதுவேனிற்கால மாளிகைசென்று அவருக்குத்தங்கள் இறுதிஅஞ்சலியைச் செலுத்திய அரசாங்கதலைவர்களில் முதலிடம்வகித்தவர்கள் இத்தாலியஜனுதிபதிகுரெருஞ்சி அவர்களும், அவருடன்சென்ற இத்தாலியபிரதமர் பிஞ்ஞோர் பான்பாறி அவர்களுமே. அரசர்களில் முதலிடம் வகித்தவர் சுவீடன்தேச குஸ்ராவ்அரசரே. இவர்அப்போது இத்தாலியிலே தமது விடுமுறையைக் கழித்துக்கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லூரி ஆசிரியருக்கு வெள்ளிவிழா

கடந்த 7-11-58 வெள்ளிவாரம். அன்று இளவாலை, அர்ச். என்றிக்கப்பர்கல்லூரி ஆசிரியர் திரு. சூ. வஸ்தியாம்பிள்ளையவர்கள் தமதுஆசிரியத் தொண்டின் இருபத்தைந்தாம்ஆண்டு நிறைவுவிழாவைக் கண்டுகளித்தார். அன்றுதினம்காலை அவரதுயூபிலியை முன்னிட்டுக் கல்லூரிச்சிற்றாலயத்தில் ஓர்தேவதோத்திர பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. மாலை வெள்ளிவிழாவைப் பாராட்டுமுகமாக ஆசிரியர்களும், மாணவர்களும் ஒருவரவேற்பளித்து, யூபிலியாசிரியரைக் கௌரவித்தனர். மாணவர்கள் மலர்மாலைசூட்டி, வாழ்த்துப்பத்திரம் வாசித்துநின்றனர். விழாஞாபகமாகப் பொற்கிழியும் அளிக்கப்பெற்றது. வரவேற்பின்போது கல்லூரிஅதிபர் வண. எல், ஏ. சிங்காரயர் M. A., சுவாமியவர்கள் ஆசிரியரது சேவையையும், துரைத்தனத்தையும் பாராட்டிப்பேசியவிடத்து, "மற்றவர்களுக்கு நீதியைக் கற்றுக்கொடுப்போர், மறுமையில் வானத்தில்இலங்கும் நட்சத்திரங்களைப்போன்று மோட்சத்தில் ஒளிவிட்டுப் பிரகாசிப்பார்கள்" என்ற ஆகமவாக்கியத்தைத் தமதுமேற்கோளாகக்குறித்து அதனைவிளக்கினின்ருர். ஆசிரியர் திரு. வி. கந்தையா B. A. அவர்களும் யூபிலியாசிரியரின் அருங்குணங்களையும், அறிவுஆற்றல்களையும் வெகுவாகப்பாராட்டிப்பேசினுர். மாணவர்களும்பாராட்டினர். தொடர்ந்து விழாநாயகர் பதிலிறுக்குமுகமாக எழுந்து, முந்தமுக்த இத்துணைவருடகாலமும் தம்மைக்காப்பாற்றிவைத்த கடவுளின்கருணையை நினைவுறுத்தித் தமதுநன்றியைத் தெரிவித்து, உபசரிப்புக்கு மனமார்ந்தநன்றி கூறிமுடித்தார். பின்னர்கல்லூரியில் ஒருதேனீர் உபசாரணையும் இடம்பெற்றது. அதிலே பழையமாணவர்களும், பெற்றோரும், அன்பர்களும் பங்குபற்றி ஆசிரியரவர்களைப் பாராட்டினர். கடைசியாக மாணவர்களின்நாடகமும் அனைவரையும்மகிழ்வித்தது.

ஆசிரியர் சூ. வஸ்தியாம்பிள்ளையவர்கள் இளவாலையைத் தமதுசனனபதியாகக் கொண்டவர். இளமையிலேயே மட்டக்களப்பு ஆசிரியகலாசாலையில் ஒருபயிற்றப்பட்டஆசிரியரானுர். பின்னர் முதன்முதலாக 1933-ம்ஆண்டு அர்ச். என்றிக்கப்பர்கல்லூரியில் ஆசிரியராகப்பதவியேற்று, இற்றைவரை தொடர்ந்து தொண்டாற்றியுள்ளார். சங்கீதம், தமிழ்இலக்கியமாகியபாடங்கள் கற்பிப்பதில் இவர் ஒருதனிப்பெருமை யுடையவர். நமது மேற்றிராசன பாடசாலைகளில் வழங்கிவரும் கத்தோலிக்கவாசகத் தொடர்புத்தகங்களின் நூலாசிரியரும்இவரே. ஒருவிஞ்ஞான சாஸ்திரப் பட்டதாரியாயிருந்து காலஞ்சென்ற இவரதுஅருமைச்சகோதரர் சங். சூ. லூயிஸ் S. S. J. பிறதர்அவர்களும் இக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார் என்பதுஈண்டு குறிப்பிடற்பாலது.

---

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்ருஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்ருஞ் சபை மாதாந்தகூட்டம் இம்மாதம் 29-ந் திகதி சனிவாரம் பி. ப. 4மணியளவில் சஞ்சூசையப்பர் சிற்ருலயத்தில் நடைபெறும். அச்சமயம் மூன்றுபேர் தமது நவாப்பியாசகாலத்தைத் துவக்குவார்கள். பகுதித்தலைவர்மார்சங்கம் 3மணியளவில் நடைபெறும். ஆகையால், அவர்கள் நேரத்தோடுவருமாறு தயவாய்கேட்டுக் கொள்ளப் படுகிருர்கள்.

A. S. FRANCIS OF MARY
சபைக்கர்த்தருக்காக

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல M. B. 1761**

சண்டிலிப்பாய்
நாகலிங்கம் கணபதிப்பிள்ளை
— வழக்காளி.

எதிராக

1. அம்பலவாணர் செந்தில்வடிவேல்,
2. ராசசிங்கம் ஆதித்தபிள்ளை

இருவரும் கட்டுடை
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டின் M. B. 1761-ம்இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் இரண்டுதுண்டுக் காணிகளும் 1959-ம்ஆண்டு தைமாதம் 29-ந்திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3மணிதொடக்கம் அந்தந்தக்காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

முதலும், வட்டியும் ரூபா 2,133. முதல் ரூபா 1,600-க்கும் தீர்வைத்திகதி 24-7-57 தொடக்கம், 14-11-57 மட்டும் 10%வட்டியும், அதன்பின் கூட்டியமுழுத் தொகைக்கும் 5%வட்டி கொடுக்கும்வரையும் இறுக்கவேண்டும். கோட்டுச்செலவு 185ரூபா 20சதம்.

### காணிகள் விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திரிக் வலிகாமம் மேற்கு மானிப்பாய் கோயிற்பற்று, மானிப்பாய்இறை 'சாணிக்கவயல்' என்னும்காணி நில. பர. 15-உம், இதில் பனைமரமும், வடலியும். எல்லை: கிழக்கு — பொன்னம்பலம் முத்துக்குமாருவும், வீரவாகு பெண் வடிவாம்பிகையின் உரிமைக்காரரும். வடக்கு — வல்லிபுரம் செல்லையா. மேற்கு — வல்லிபுரம் செல்லையாவும், முருகேசு வல்லிபுரமும், பங்காளரும். தெற்கு — வாய்க்கால்.

பதிவுஇலக்கம் E 95|14.

2. ஷெ இறை 'கீறைவயல்' நெல்பரப்பு $16\frac{1}{2}$. எல்லை: கிழக்கும், தெற்கும் வாய்க்கால். வடக்கு — சண்முகம் பெண் கமலாவதி. மேற்கு — வேலுப்பிள்ளை விஞசித்தம்பி.

பதிவுஇலக்கம் E 286|20

**இ. கனகரெத்தினம்,**
**கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.**

35- கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குழி, 17-11 58.

---

## ஏலவிற்பனவு

மோட்டர் லொறி நம். C. V. 595
(பெட் போட்)

1958-ம்ஆண்டு கார்த்திகைமாதம் 21-ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-30 மணியளவில் மேற்சொல்லப்பட்ட லொறி லைசென்ஸ் இல்லாமல் யாழ்ப்பாண மாநகரசபைக் கரேச்சில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வாங்குபவர் உடனேமுழுத்தொகையையும்கட்டி லொறியை எடுத்துக்கொள்ள வேண்டும்.

லொறியைப் பார்வையிட விரும்புவோர் முனிசிப்பல்கரேச்சில் கந்தோர் வேலைநேரங்களில் பார்வையிடலாம்.

ஆ. வ. சின்னையா,
மாநகரசபைக் கொமிஷனர்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம், 6-11-58.

---


### நோய்களின் விபரம்

நீரிழிவு, சன்னி, தொய்வு, இஸ்றேறியாவாய்வு, காசம், குன்மம், காயாசுவாதம், உருக்குநோய், புற்றுநோய், கெற்பச்சிதைவினுல் ஏற்படும்ரோகங்கள் முதலியனவற்றிற்குச் சிகிச்சை பெற எம்மிடம் கலந்து ஆலோசியுங்கள்.


**உங்கள் சுகவாழ்வே**
**எமது சேவையின் இலட்சியம்**





---

## 1-ம்வருட மரணஞாபகம்



**ஞானப்பிரகாசம் நீக்கிலஸ் சூசைதாசன்**

**பிறப்பு: 6-12-35 இறப்பு: 24-11-57**

சர்வேசுரா, இரக்கங்களின் ஆண்டவரே, மரித்தவருடாந்தரநாளைநாங்கள்ஞாபகஞ்செய்கின்றஉமது அடியானுகிய ஞானப்பிரகாசம் நீக்கிலஸ் சூசைதாசனின் ஆத்துமத்திற்கு இளைப்பாற்றியின் இடத்தையும், சமாதானத்தின் பாக்கியத்தையும், மகிமையின் ஒளியையும் கட்டளையிட்டருளும் ஆமென்.

இதைக்கண்ணுறும் விசுவாசிகள் இவரின் ஆத்துமஇளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகின்ருேம்.

இவரைஇழந்து வருந்தும்
**தாய், சகோதரர், மைத்துனர்.**
பாலைஷயூர், 17-11-58.

---



## எஸ். செபமாலைமரியை செல்வருணியின் 3-ம் வருட மரண ஞாபகம்

**பிறப்பு: 3-5-20 இறப்பு: 28-11-55**

ஆண்டவரே, விசுவாசத்தின் அடையாளத்தோடு எங்களுக்குமுன் சென்றவளும், சமாதான நித்திரையாய்ச் சயனித்திருக்கின்றவளும், தேவரீருக்கு அடிமையானவளுமான எஸ். செபமாலைமரியை செல்வருணி அவர்களை நினைத்தருளும். கிறீஸ்துவில் இளைப்பாறுகின்ற சகலருக்கும் குளிர்ச்சியும், பிரகாசமும், சமாதானமும் உள்ளஇடத்தைக் கட்டளையிட்டருளவேண்டுமென்று தேவரீரை மன்ருடுகிருேம். எங்கள் கர்த்தராகிய கிறீஸ்து நாமே காரணகாட்சியாக ஆமென்.

இதைக்கண்ணுறும் கிறீஸ்தவசகோதரமே, இவளின் ஆன்மஇளைப்பாற்றிக்காக ஒரு பர. பிரி. திரி. சொல்லுமாறு மிகவும் தாழ்மையாக் கேட்டுக்கொள்ளுகின்ருேம்.

இவளின் ஆன்மஇளைப்பாற்றிக்காக மட்டக்களப்பு, அர்ச் வியாகுலமாதாகோவிலிலும், குளமங்கால், அர்ச். சவேரியார் கோவிலிலும், ஊர்காவற்றுறை, சந்தியோகுமையோர் கோவிலிலும் இம்மாதம் 28-ந்திகதி துக்கப்பாடற்பூசைகள் நிறைவேறும்.

**K. செபமாலையும், பிள்ளைகளும்.**
சுன்ஞகம். பொலிஸ்அதிகாரி.

---

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

சர்வலோகராணியும், வேண்டினுேரைக் கைவிடாதவளுமாகிய பரிசுத்த சதாசகாய மாதாவின் தாய்க்குரிய அருளினுலே எனதுசகோதரனைப் பீடித்திருந்தவியாதி உடனே குணமானது. அவளின்நாமம் வாழ்த்தப்படக்கடவதாக.

மரியாயே, வாழ்க!

செ. விக்றர் இம்மானுவேல்
அளம்பில். ராஜபுத்திரன்

---

● காலஞ்சென்ற 12-ம்பத்திநாத பாப்பானவர் மரிக்கும்போது அவருக்கு வயது 82வருடமும், 7மாதமும். அவர் 19வருடமும், 222நாளும் திருச்சபையை ஆட்சிசெய்திருக்கின்ருர். அவர் 1939-ம் ஆண்டு பங்குனிமாதம் 2-ந் திகதியாகியதம்முடைய 63-வதுபிறந்த பெருநாளன்று பாப்பரசாகத் தெரியப்பெற்ருர்.

● 12-ம்பத்திநாதரைப் பாப்பரசராகத் தெரிவுசெய்த கருதினுல்மாரின் திருக்கூட்டமும் சரித்திரப்பெருமை வாய்ந்ததாகும். இக்காலசரித்திரத்திலே முதன்முறையாக அந்தத்திருக்கூட்டத்துக்கு அப்போதுஉலகிலிருந்த கருதினுல்மார் அனைவருமே — அதாவது 16நாடுகளைச்சேர்ந்த 62 கருதினுல்மார்களுமே சமுகமளித்தார்கள்.

● ஓர்அரைநூற்ருண்டிலே இரண்டாம்முறையாக அர்ச். பேதுருவானவரின் ஸ்தானத்துக்கு வெனிஸ்நகரின் கருதினுல்-பத்திறியாக்குஆண்டவர்— அதாவது கருதினுல் யோசெவ் ரொங்கல்லிஆண்டவர் தெரியப்பெற்றிருப்பதும் சரித்திரப்பெருமை வாய்ந்ததாகும். முதலாம்முறையாகத் தெரியப்பெற்றவர் கருதினுல் யோசெவ் சாத்தோஎன் அறியப்பட்டிருந்த அர்ச். 10-ம்பத்திநாதரே.

● புதியபாப்பரசர் தெரியப்பெற்றுவிட்டாரென்ற சுபசெய்திபரந்ததும் உலகமுழுவதிலுமுள்ள அரசாங்கதலைவர்கள், குருசிரேஷ்டர்களிடமிருந்து பெருந்தொகையான வாழ்த்துச்செய்திகள் அவருக்கு அனுப்பிவைக்கப்படலாயின. இவற்றில்ஒன்று மாட்சிமை தங்கிய எலிசபெத்மகாராணியாராலும், மற்ருென்று பிரான்ஸியபிரதமர் ஜெனறல் தெகோல்அவர்களாலும் அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

● "தாங்கள் (பாப்பரசராக)த் தெரிவுசெய்யப் பெற்றதையிட்டு எமதுமனப்பூர்வமான சோபனவாழ்த்துகளைப் பரிசுத்தபிதாவாகிய தங்களுக்குத் தெரிவித்து, தாங்கள் அழைக்கப்பெற்றிருக்கும் உந்நதபதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதிலே தங்களுக்குச் சுகத்தையும், சேமத்தையும் வேண்டி எமது உச்சிதநல்லாசிகளையும் அனுப்பிவைக்கப் பேருவகைகொள்ளுகிருேம்" என்பதே எலிசபேத்மகாராணியார் அனுப்பிவைத்த செய்தியாகும்.

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, November 20-1958.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org